விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 21 புதன்கிழமை (03.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## விசாரணைகளை வலியுறுத்தி

# திரண்டது திரையுலகம்



### ரஜினி, கமல் உட்பட பலர் பங்கேற்பு

(சென்னை) ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தென்னிந்திய நடிகர் - நடிகைகள் நேற்றுச் சென்னையில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். இதில் ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட பல்வேறு நடிகர்கள், நடிகைகள் மற்றும் இயக்குநர்களும் பங்கேற்றனர்.

காலை 9 மணிக்கு தொடங்கிய உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு முடிபடைந்தது. உண்ணாவிரத முடிபில் நடிகர் சங்கம் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடிகர் சரத்குமார் வாசித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

### நிறைவேறிய 7 தீர்மானங்கள்

(சென்னை)

தென்னிந்திய நடிகர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தில் 7 விடயங்கள் அடங்கிய தீர்மானம் ஒன்று வாசிக்கப்பட்டது. அதனை தலைவர் சரத்குமார் வாசித்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது, ➢ இலங்கையில் நடந்த இனப் படுகொலையில் பாதிக்கப்பட்ட நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு மறுவாழ்வு அமைத்துத்தர இலங்கை அரசை (19ஆம் பக்கம் பார்க்க)

### நடிகர் விஜய் பங்கேற்கவில்லை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தென்னிந்திய நடிகர் - நடிகைகள் நேற்றுச் சென்னையில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நடிகர் விஜய் அவுஸ்திரேலியாவில் படப்பிடிப்பில் இருந்ததால் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. இதனால் போராட்டம் குறித்து அவர் கடிதம் ஒன்றை நடிகர் சங்கத்திற்கு அனுப்பியுள்ளார்.

தமிழ் உணர்வுள்ள ஒவ்வொரு மனி (19ஆம் பக்கம் பார்க்க)

## கல்லூரிகளைத் திறந்தாலும் ஈழம் மலரும் வரை போராட்டம்

### தமிழக மாணவர்கள் அறிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டங்களை அடுத்து மூடப்பட்டிருந்த கல்லூரிகள் இன்று திறக்கப் படவுள்ளன. இந்நிலையில் இலங்கை இனப் படுகொலையைக் கண்டித்தும் மத்திய அரசுக்கு எதிராகவும் தமிழகத்தின் பல பகுதிகளில் மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இலங்கையில் தமிழர்களைக் கொன்றுகுவித்த அரசுமீதுநடவடிக்கை கோரி தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பகுதியில் அனைத்துக் கல்லூரி மாணவர்கள் மனிதச் சங்கிலியில் போராட்டத்தை நடத்தினர்.

கல்லூரிகளை திறந்தாலும், இலங்கையில் தமிழீழம் மலரும் வரை தங்களது போராட்டம் தொடரும் என மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டமாணவர்கள் உறுதிபடத்தெரிவித்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு அமெ. நீதிமன்றில் தள்ளுபடி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் நட்டஈடு கோரி மூன்று விடுதலைப் புலி ஆதரவாளர்களினால் அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை மூவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதவான் குழுவொன்று விசாரணை செய்துள்ளது.

ஜனாதிபதி பதவியை வகிக்கும் வரையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு இராஜதந்திர வரப்பிரசாதம் காணப்படுவதாகவும் இதனால் வழக்குத் தொடரமுடியாதெனவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஜனாதிபதிக்கு இராஜதந்திர வரப்பிரசாதம் வழங்கியமைக்கு எதிர்ப்பை வெளியிட்ட புலி ஆதரவாளர் (19ஆம் பக்கம் பார்க்க)

## வெப்பநிலை அதிகரிக்கும்

(கொழும்பு)

இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்குமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், நாடு பூராகவும் இந்த நாட்களில் காணப்படுகின்ற வெப்ப வானிலை எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 5-ம் திகதியிலிருந்து 15-ம் திகதி வரை இலங்கையின் மேல் (20ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கை கோரும் இலங்கை அரசு

(கொழும்பு)

சென்னையில் சினிமா நட்சத்திரங்களினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடத்திய போராட்டம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

தென்னிந்தியாவின் புகழ்பூத்த சினிமா நட்சத்திரங்களாக போற்றப்படும் ரஜினிகாந்த், கமல்ஹாசன், சரத்குமார், விஜய், அஜித் போன்ற முன்னணி நட்சத்திரங்கள் ஒரு நாள் (19ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய சுதந்திர முன்னணி தமிழருக்கு எதிரானதல்ல!

### அமைச்சர் விமல் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் தமிழ் மக்களுக்கும், தமிழினத்திற்கும் எதிரானவர்களல்ல; இனவாதிகளுமல்ல என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு மற்றும் நிர்மாண பொறியியல் துறை அமைச்சருமான விமல் வீரவன்ச யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

யாழ். குருநகர் தொடர்மாடி வீடமைப்பு திட்டத்தின் புனர்நிர்மாணப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இனங்களுக்கிடையில் முரண்பாட்டை விரும்புபவர்கள் நாட்டில் ஏற்பட் (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண இளைஞர்கள் மூவர் தமிழகத்துக்குத் தப்பிச் சென்றனர்

(இராமேஸ்வரம்)

வட பகுதிகளில் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் அண்மைக் காலங்களில் அதிகரித்திருப்பதாகக் கூறி தனுஷ்கோடிக்கு மூன்று இளைஞர்கள் சென்றுள்ளனர்.

ஆனால் முறையான ஆவணங்களில்லாது இந்தியா வந்திருப்பதால் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயராஜ் (வயது-26), வசந்த்குமார் (24), மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த பிரசாத் (வயது-19) ஆகிய மூவரும் நேற்றுச் செவ்வாய்க் கிழமை அதிகாலையில் தனுஷ்கோடிக்கு அருகே தனியார் படகுகளில் இறக்கிவிடப்பட்டு, பின்னர் இராமநாதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அப்போது அவர்கள் கடந்த சில நாட் (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் விமல் கலந்து கொண்ட நிகழ்வில்

# உயிர் நீத்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது



(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர் மாடி வீடமைப்பு திட்ட புனர்நிர்மாணப்பணிகள் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்த போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வு ஆரம்பித்து விருந்தினர்கள் மேடைக்கு வரவழைக்கப்பட்ட போது இறுதி யுத்தத்தின் போது உயிர் நீத்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வுகளில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படுவதே குறைவடைந்து வரும் நிலையில் பயங்கரவாதிகள் எனக் கூறப்படும் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்து மாறு நிகழ்வில் அறிவிப்பாளராக பணியாற்றிய (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வடக்கில் சிவில் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்

## தவறின் வேறு வகையில்தான் அமையும் என்கிறது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சிவில் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்படுத்தாவிட்டால் வேறு விதத்தில்தான் அதனை கொண்டு வர வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் போராட்டங்களின் மீதும் மக்கள் பிரதிநிதிகள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை தடுக்க வேண்டிய பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தாக்குதல்காரர்களைப் பிடித்துக் கொடுத்தால் கூட அவர்களை விட்டு விடுகின்றனர்.

எனவே வடக்கில் சிவில் நிர்வாகம் தேவைப் படுகின்றது எனத் தெரிவித்த அவர், சிவில் நிர்வாகத்தை கொண்டு வர வேறு வழியைத்தான் நாட வேண்டியுள்ளது எனவும் ,

மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். அது தவிர இந்த அரசாங்கம் இருக்கும்வரை தமிழர்களுக்கு எந்த விதத்திலும் பயனில்லை எனவும் குடும்ப ஆட்சி நடத்தி கொண்டிருக்கிறார் ஜனாதிபதி எனவும் அவர் குற்றம் சாட்டினார். (எ-6)

# சிகரெட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பிரிமியம் வகையான சிகரெட்டுக்களின் விலையை சிலோன் டுபாகோ கம்பனி அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய சிகரெட்டொன்று 2 ரூபாய் மற்றும் ஒரு ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கைத் தமிழ் அகதிகளில் பலர் குடும்பத்துடன் தலைமறைவு

## தமிழ்நாடு அகதி முகாம்களில் பரபரப்பு

(சென்னை)

தமிழகத்தில் கும்மிடிப்பூண்டி தாசில்தார் அலுவலகம் அருகே அமைந்துள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் பல தமிழர்கள் குடும்பத்தோடு காணவில்லை என்ற அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இலங்கையில் இருந்து அகதிகளாக வந்த 999 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 438 தமிழர்கள் இந்த அகதி முகாமில் வசித்து வருகின்றனர்.

முகாம் பதிவில் உள்ளவர்கள் அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கும்மிடிப்பூண்டி முகாமில் இருந்து சிலர் உரிய அனுமதி இன்றி கடல் வழியே படகு மூலம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டதாக பொலிஸ் விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சர்வதேச கடலில் இதுபோன்ற சட்டவிரோத பயணங்கள் மேற்கொள்வது ஒரு குற்ற செயலாகக் கருதப்படுகிறது எனவும் முறையான அரசு அனுமதி பெற்று வெளிநாடுகளுக்கு செல்லுமாறு அகதிகள் துறை சார்ந்த அதிகாரிகள் தொடர்ந்து முகாம் தமிழர்களிடம் அறிவுறுத்தி வருகின்றனர்.

முகாம் பதிவு பெற்றவர்கள் இப்படி சட்டம் ஒழுங்கை பாதிக்கும் வகையில் நடந்து கொள்வதால் அத்தகைய நபர்கள் குறித்தும் அவர்களின் செயல்பாடுகள் குறித்தும் கண்டறிவதில் பொலிஸாருக்கு பலவழிகளில் தொடர்ந்து சிக்கல் ஏற்பட்டு வருகிறது.


இந்த நிலையில் குமிடிப்பூண்டி முகாம் பதிவில் தங்கியிருந்த விஜயானந்தம் என்ற விஜி(வயது 35), ஜான்சன் என்ற தயாளன்(40), தர்மசீலன்(37), சித்ரா(39) உள்பட சுமார் 7 குடும்பங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட நபர்கள் குறித்து தற்போது எவ்வித தகவலும் இல்லை.

மாயமான அவர்கள் அனைவரும் உரிய அனுமதி இன்றி கடல் வழியே அவுஸ்திரேலியா சென்றிருக்கலாம் என்ற தகவல் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ-11)

# பொது பல சேனாவின் நற்பெயருக்கு களங்கம்

## அதன் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



தமது அமைப்பின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் மின்னஞ்சல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது பல சேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பு இவ்வாறான எந்தவிதமான மின்னஞ்சல்களையும் வெளியிடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலியான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலமும் வேறும் வழிகளிலும் அமைப்பின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொது பல் சேனா அமைப்பினால் வெளியிடப்படும் கருத்துக்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொது பல சேனா அமைப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆசியும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பாதுகாப்பும் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மின்னஞ்சல் ஹலால் தொடர்பிலும், தமிழ் முஸ்லிம் மக்களை எச்சரிக்கும் வகையிலும் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# தீவிரவாத அமைப்புகளை தடை செய்ய புதிய சட்டம்!

நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள பொது பல சேனா, இராவணா பலய மற்றும் சிங்கள ராவய போன்ற தீவிரவாத அமைப்புக்களை தடை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தயாரித்து வருகிறார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் இரண்டு வாரங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் படும் என்று அமைச்சர் தெரிவித்ததாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாட்டில் சமயங்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் இந்த இயக்கங்கள் பகைமையை வளர்த்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் பகிரங்கமாக பகைமையை வளர்த்து வந்தாலும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், இவைகளைத் தடைசெய்ய வேண்டியது பற்றி ஜனாதிபதிக்கு எழுதியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

எமது அரசமைப் பின்படி எவரும் தான் விரும்பும் எந்தச் சமயத்தையும் பின்பற்ற முடியும்.

மக்கள் தாம் அச்சுறுத்தப்படுவதாக உணர்ந்தால் பொலிஸாரிடம் முறையிட முடியும்.

பொலிஸார் நடவடிக்கை எடுக்கா விட்டால் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (எ-11)


காணி, வீடு விற்பனைக்கு

காணி — கரவெட்டி
கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அண்மையில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (NRE/L/019)

வீடு — உடுப்பிட்டி
உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அண்மையில் 2¾ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. (NRE/H/022)

காணி — உடுவில்
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (NRE/L/015)

வீடு — சங்கானை
சங்கானை மாலியத்தை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 2 ¾ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. (NRE/H/017)

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



கதவு விற்பனைக்கு
கடைக்குரிய பலகைக் கதவு நிலையுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772850753
(2302)



யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த
சென்னையில் ஒரு நாள்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே நாள் வெளியீடு



பிள்ளையார் இன்
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
25% கழிவு
இன்றைய விசேட உணவு :-
தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
24
APIRAL - SEPTEMBER 2013
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
(C-2851)
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் மிகவும் திறமைசாலியானவர். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவ்வப்போது மது அருந்துவார்

இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்து விட்டார். இது அனைவருக்கும் துன்பத்தை ஏற்படுத்தியது. ராஜாவே குடிக்க ஆரம்பித்து விட்டால், இராச்சியம் என்ன ஆவது?

ராஜாவின் குடிப்பழக்கம் ராணியின் மனதினுள் கஷ்டத்தை ஏற்படுத்தியது. என்ன செய்யலாமென ஒருநாள் பூராகவும் யோசித்தாள்.

அச்சமயத்தில் புத்திசாலியான அமைச்சர் ஒருவர் அரண்மனையிலே இருந்தார். அவரிடம் ராணி சென்று விடயத்தைச் சொன்னாள்.

''மன்னரை எப்படியாவது இந்த மதுப்பழக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும், அதற்கு நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள்.

''சரி'' என்று ராணியிடம் அவர் சொன்னார்.

அதன்பின் ஒருநாள் அந்த ராஜா இருந்த தனி அறையினுள் நுழைந்தார் அமைச்சர்.

அங்கே வைக்கப்பட்டிருந்த மது போத்தலை தன் மடியிலே மறைத்து கொண்டார்.

ராஜா தற்செயலாக இதைக் கவனித்து விட்டார். உடனே அமைச்சரை அருகில் அழைத்து ''மடியிலே என்ன அது?'' என்று கேட்டார்.

''ஒன்றுமில்லை'' என்று அமைச்சர் மறைத்தார். ''உண்மையைச் சொல், மடியிலே என்ன?'' என்று மறுபடியும் ராஜா கேட்டார்.

''இது... இது... இது...வந்து... கிளி'' என்றார் அமைச்சார்.

''என்ன உளர்றே? கிளியா அது?'' என்று ராஜா கேட்டார்.

''இல்லை... இல்லை... இது குதிரை'' என்று அமைச்சர் கூற ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.

'' இதோ பார்! செய்த குற்றத்தை ஒத்துக்கொள்! அதுதான் உனக்கு நல்லது, அதைவிடுத்து குதிரை-கழுதை என்று கதை சொல்லிக்கொண்டு இருக்காதே'' என்றார்.

''மன்னா! நீங்கள் சொல்வதுதான் கரெக்ட்! என் மடியிலே இருப்பது கழுதைதான்'' என்றார்.

மன்னனின் கோபம் மேலோங்கியது.

''இதோ பார்! உள்ளதை உள்ளபடி கூறினால் உயிரோடு விடுவேன், இல்லையேல்... உன் தலையை வெட்டும்படியாக உத்தரவு போடுவேன்'' என்றார்.

அமைச்சர் உள்ளதைச் சொல்லி விட்டார். இப்போதும் சொல்கிறேன்... நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை'' என்றார் அமைச்சர்.

ராஜா முறைத்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார், ''மன்னா! முதலிலே ஒரு கிளாஸ் மது உள்ளே போனால் ஒன்றும் செய்யாது, அதைத்தான் ''ஒன்றுமில்லை'' என்றேன்.

இரண்டாவது கிளாஸ் மது உள்ளே போனதும் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்பி சொல்லிக்கொண்டிருப்பார். அதனாலே'' கிளி'' என்று சொன்னேன்.

மூன்றாவது கிளாஸ் மது உள்ளே போனதும் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான். நாலாவது கோப்பை மது உள்ளே போனதும் கழுதை மாதிரி கத்துவான்.

ஐந்தாவது மது கோப்பையின் போது மனிதன் மதுவாகவே மாறிவிடுவான்.

இவ்வாறு அமைச்சர் சாமர்த்தியமாக எடுத்துக் கூறியதைக் கேட்டதும் ராஜா மதுவின் அடிமையில் இருந்து மீண்டார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# எரிகாயங்களுக்கு சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் எரிகாயங்களுக்கு இலக்காகி சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலையின் புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமயலறையில் கவனயீனத்தால் தீப்பற்றிக் கொண்டமை, மன உளைச்சல் காரணமாகவும் குடும்பச் சண்டை காரணமாகவும் மண் ணெண் ணெய் ஊற்றித் தீ மூட்டிக் கொள்ளுதல் போன்ற சம்பவங்களின் மூலமாகவே அதிகமானவர்கள் தீக்காயங்களுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக் கப்பட்டு வருகின்றனர்.

இவ்களில்அதிகமானவ்கள்பெண்களாகவே காணப்படுவதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பாரதூரமான எரிகாயங்களுக்கு இலக்காகியவர்கள் சில நாட்களின் பின்னர் உயிரிழந்துவிடும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புள்ளி விபரங்களின் மூலம் உடலில் முக்கிய பாகங்களில் தீக்காயங்கள் ஏற்பட்டவர்களுக்கு உயிராபத்து நிச்சயம் என்றே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீக்காயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதனை அதன் தரவுகளில் இருந்து அறிய முடிகின்றது.

அத்துடன் கடந்த ஆண்டு மட்டும் 194 பேர் இந்த வைத்தியசாலையில் தீக்காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களில் 30 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் வைத்தியசாலை புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-6)

# முறைசாரா கல்வி பிரிவினரின் ஏற்பாட்டில் பயிற்சி நெறிகள்

வலிகாமம் கல்விவலய முறைசாரா கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் மூன்று மாதகாலப் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட பாடசாலை அதிபரிடம் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் செ. சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிகள் ஏப்ரல் முதலாம் வாரம் முதல் குறிப்பிட்ட நிலையங்களில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கைவேலை பயிற்சி யா/அராலி இந்துக் கல்லூரியிலும் கணனிப்பயிற்சி யா/ சுதுமலை வடக்கு தமிழ்கலவன் பாடசாலையிலும் மணப்பெண் அலங்காரம், முகஒப்பனை, சிகையலங்காரம் சார்ந்த பயிற்சிகள் யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மற்றும் பன்னாலை மாதர் கிராம அபிவிருத்தி நிலையத்திலும் உடை அமைத்தல் பயிற்சி யா/ மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் வலிகாமம் கல்வி வலய தொழிற் பயிற்சி நிலையத்திலும் (யா/இராமநாதன் கல்லூரி) புத்தகம் கட்டுதல் யா/ இணுவில் இந்துக்கல்லூரியிலும் வீட்டு மின் இணைப்பு பயிற்சி அளவெட்டி சனசமூக நிலையத்திலும் மணப்பெண் மனை முகாமைத்துவப்பயிற்சி வலிகாமம் கல்வி வலய தொழிற் பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை மொழிப் பயிற்சி நெறியாக 2 ஆம் மொழி ஆங்கிலக் கற்கை நெறி அளவெட்டி தெற்கு மணற்புலம் சனசமூக நிலையத்திலும் 2'ஆம் மொழி சிங்களம் யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் மற்றும் யா/இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| தக்காளி | 80 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 80 | 40 |
| கோவா | 60 | 40 | 60 | 60 |
| கரட் | 120 | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 4 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 40-80 | 60-100 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 40 | 40 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 120 | 80 |
| கறிமிளகாய் | 120 | 90 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 120 | 90 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20-30 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20-30 | 20 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-45 | 50-60 | 45-50 |
| இரசவள்ளி | 90 | 90 | 100 | 100 |
| வெங்காயப்பூ | -- | 180 | -- | 160 |

# இராசி பலன்

*03.04.2013*
*(பங்குனி 21, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*
*அட்டமி முன்னிரவு 11.33 மணிவரை*
*பூராடம் பின்னிரவு 12.27 மணிவரை*
*இராகுகாலம் 12.10-1.40 மணிவரை*
*சுபநேரம் 4.40-6.10 மணிவரை*
*அட்டமி-நவமி*

**மேடம்** ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காமல் இருப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உற்றார் உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** செய்தொழில் மேன்மையுண்டு, உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த கருமங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பெற்றோர் மீது அதிக பிரியம் காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர புதிய வழியைக் கையாள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், அந்நியர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, உங்கள் வார்த்தையால் பிறரைக் கவர்வீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சிலரை திருப்திப்படுத்துவதற்காக திருப்திப்படுத்துவதற்கா அதிகமாக பாடுபடுவீர்கள்.

**மகரம்** பயணத்தால் பிரபலமானவர் களின் சந்திப்பு இடம் பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், மனச்சஞ்சலங்கள் கூடும், எடுத்த காரியத்தில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** காரிய அனுகூலமுண்டு, தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், வருமானம் திருப்திதரும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள்.

**மீனம்** வாக்குறுதிகளை காப்பாற்றி மகிழும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர் விடுதி பிரச்சினைக்கு தீர்வுகாண விசேட குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைத்தியர் விடுதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளினையும் கையாள்வதற்கு 18 பேர் கொண்ட விசேட விடுதிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர் விடுதி பகிர்ந்தளிப்பில் சில முரண்பாடுகள் ஏற்பட்டு வந்தன.

இதற்கு வைத்தியசாலை தவிர்ந்த வெளியாட்களின் தலையீடு அதிகரித்துக் காணப்படுவதாகவும் அரச மருத்துவர் சங்கத்தின் யாழ். கிளையினர் குற்றஞ்சாட்டியதோடு இது தொடர்பில் தமது தாய்ச்சங்கத்திற்கும் கடிதமொன்றினை அனுப்பியிருந்தது.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ நிபுணர்கள் 15 பேரும் யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினைச் சேர்ந்த 3 பேரும் மொத்தம் 18பேர் கொண்ட குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக சத்திரசிகிச்சை நிபுணர் எம். சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார் என யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார். (அ-4)



நன்றி: ஐலண்ட்

# யாழ்.மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அமைச்சர் பசிலுக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அசௌகரியங்களை தீர்த்து வைக்கக்கோரி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இம்மகஜரினை யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தினர் நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளனர். அம் மஜரில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு,**

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் நியமனக் கடிதம் இன்றி பதில் கடமையாற்றுகின்றனர். சிலர் மூன்று பிரிவுகளிலும் கடமையாற்றுகின்றனர். அவர்களிற்கு பதில் கடமையாற்றுவதற்கு உதவி ஆணையாரினால் நியமனக் கடிதம் வழங்கப்படல் வேண்டும். பதில் கடமையாற்றும் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். தற்போது வழங்கப்படும் பிரயாணப் படியான 400/- ரூபாவினை ஆயிரம் ரூபாவாக உயர்த்த வேண்டும். கடந்த வருடம் பணிப்பாளர் நாயகம் சமுர்த்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கிணங்க சனி,ஞாயிறு தினங்களில் கடமையாற்றிய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும். புத்தாண்டு சேமிப்பு தொடர்பாக அதிகமாக சேமித்த உத்தியோகத்தர்களிற்கு சுற்று நிருபத்தின் பிரகாரம் தனிப்பட்ட கௌரவிப்பு சான்றிதழ் வழங்கப்படல் வேண்டும். யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்தி திட்டம் தொடர்பாக ஒரே நடைமுறையைக் கொண்டுவரல் வேண்டும். எந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டதும் தொழிற்சங்க சட்டவாக்கத்திற்கு அமைவாக இடமாற்ற சபை அமைக்கப்பட்டு மேற்கொள்ள வேண்டும். தென்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனுபவிக்கும் சகல நலன்களும் எமது உத்தியோகத்தர்களும் அனுபவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மகஜரின் பிரதிகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமை ச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கந்தையா மகேஸ்வரன், சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.டி.ஏ. ஜெகத்குமார ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(அ-4)




# பொலிகண்டி வீதியில் பயணிக்க முடியவில்லை

(தும்பளை)

நெல்லியடி குஞ்சர் கடையில் இருந்து பொலிகண்டிக்கு செல்லும் பிரதான பாதை மிகவும் மோசமான நிலையில் குன்று குழியுமாக காணப்படுகிறது.

இப்பாதையூடாகவே இப்பகுதி மக்கள் நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு செல்கின்றனர்.

குன்றும் குழியுமாக உள்ள இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு விபத்துக்களையும் எதிர்கொள்கின்றனர்.

மழை காலங்களில் இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து போக்குவரத்துக்கு உதவ முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-19)

# சிவபூமி பாடசாலை விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினர்களாக வடமாகாணக் கல்வி அமைச்சின் உதவி செயலாளர் விக்னேஸ்வரன் மற்றும் அவரது பாரியாரும், சிறப்புவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும், சர்வதேச விசேட ஒலிம்பிக் குழுவின் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் மா. இளம்பிறையன் மற்றும் அவரது பாரியாரும், கௌரவ விருந்தினர்களாக அரசடி பிள்ளையார் ஆலய தலைவர் இ. பாலசுந்தரம் மற்றும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# சம்பந்தருக்கு வெளிநாட்டு வாழ்க்கை கருணாநிதிக்கோ குளிர்சாதனப் பெட்டி

## இப்படி கிண்டல் அடித்தார் அமைச்சர் விமல்

இந்தியாவின் தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் தி.மு.க வின் தலைவருமான கலைஞர் கருணாநிதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோருக்கு எதிராக யாழில் வைத்து வசை பாடினார் அமைச்சர் விமல்வீரவன்ச.

யாழ். குருநகர் தொடர்மாடி வீடமைப்பு திட்டத்தின் புனர்நிர்மாணப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு மற்றும் நிர்மாண பொறியியல்துறை அமைச்சருமான விமல்வீரவன்ச.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, அமைச்சர் கலைஞர் கருணாநிதி மற்றும் த.தே.கூ.தலைவர் சம்பந்தன் ஆகியோருக்கு எதிராக வசைபாடியிருந்தார்.

இறுதி யுத்தத்தின் போது கலைஞர் கருணாநிதி உண்ணாவிரதம் இருந்தார். நான் அறிந்த வரை கலைஞர் கருணாநிதி மட்டும் தான் குளிர்சாதனப் பெட்டிகளை அருகில் வைத்துக்கொண்டு உண்ணாவிரதம் இருந்தவர் எனக் கூறியதோடு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றம் நடைபெறும் காலத்தில்தான் நாட்டிலிருப்பார். அதன் பின்பு வெளிநாடுகளுக்குச் சென்று விடுவார் .திருகோணமலைக்குஅவர் வருவதாகயிருந்தால் தேர்தலுக்கு ஒரு மாத காலத்திற்கு முன்புதான் வருவார் எனவும் கூறினார்.இதுதவிர அரசதரப்பினர் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களோடு வாழ்ந்து உதவிகளைச் செய்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (அ-6)



அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க மாநாடு நேற்றைய தினம் நல்லூர் பிரதேசசெயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பொருளாளர் லயன் என்.ரி.எஸ் சுபநாதன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டியன்குளத்தில் 30 குடும்பங்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்டவர்கள் முல்லை.அரச அதிபருக்கு மகஜர்

(மல்லாவி)

**மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாண்டியன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய 30 குடும்பங்களை சேர்ந்த பயனாளிகள் தமக்கு யு.என்.கபிற்றற் நிறுவனத்தால் வழங்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட வீட்டுத் திட்டம் இன்னமும் வழங்கப்படவில்லை என முல்லை.மாவட்ட அரச அதிபருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.**

கடந்த 2011 ஆம் ஆண்டு பிரதேச செயலாளராக இருந்த சி.ஜெயகாந் முன்னிலையில் மேற்படி நிறுவனத்தால் 30 பயனாளிகள் அவர்களது குடும்ப நிலையை கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி நிறுவனம் 2011 ஆம் ஆண்டு ஜூன்மாத நடுப்பகுதியில் பயனாளிகளின் குடும்பத்தினரின் படம், வீட்டின் வரைபடம், காணி தொடர்பான ஆவணம், குடும்ப பதிவு அட்டை, இலங்கை வங்கி புத்தகம் உட்பட யு.என்.எச்.சி.ஆர். அமைப்பினால் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற்ற படிவம் என்பவற்றை எம்மிடம் இருந்து பெற்றுவிட்டு நாம் அமைக்க வேண்டிய வீட்டு அளவுத்திட்டம் தொடர்பாக விளக்கமும் வழங்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை எந்தவித தொடர்புகளும் இன்றி அந்நிறுவனம் சென்றுவிட்டது.

அதன் பின்னர் நாம் தற்போது உள்ள பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டபோது 3 ஆம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்திய அரசாங்கத்தினுடைய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்வதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால், தற்போது வெளியிடப்பட்டுள்ள 24 பயனாளிகள் தெரிவில் எமது பெயர்கள் எதுவுமே உள்ளடக்கப்படவில்லை.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தினால் எமது தற்காலிக வீடுகளும் தாக்குப் பிடிக்க முடியாது சிதைவடைந்துள்ளது.

எனவே, இரண்டு திட்டங்களிலும் உள்வாங்கப்படாதிருக்கும் எமது குடும்ப நிலையை கருத்திற்கொண்டு மேற்படி திட்டங்களில் ஏதாவது ஒன்றில் எமக்கு நிரந்தர வீடுகள் கிடைக்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றோம் என அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-3-15)

# பெண்ணின் சடலத்தை புதைக்குமாறு உத்தரவு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை எரிகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த விஜயகுமார் சுகந்தி (வயது 32) என்ற இளம் குடும்பப் பெண்ணின் சடலத்தை புதைக்குமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

நெல்லியடி இலங்கை வங்கி ஒழுங்கையைச் சேர்ந்த மேற்படி குடும்பப் பெண் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வீட்டில் எரிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவருடைய மரண விசாரணையின் போது சந்தேகம் ஏற்பட்டதனால் சடலத்தினை புதைக்குமாறு பொலிஸாருக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார். (அ-3-24)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(கரவெட்டி)

கரவெட்டி யாக்கரு குளத்தடிப்பகுதியில் கடந்த 31ஆம் திகதி இரவு குடும்பஸ்தர் மீது நபர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, கரவெட்டி யாக்கரு பகுதியைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு யாக்கரு குளத்தடிப் பகுதிக்கு குளிக்கச் சென்ற வேளை அங்கு மறைந்திருந்த நபர் ஒருவர் இவர் மீது தடியால் கடுமையாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த வாலி முருகன் (வயது 60) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-3-24)

# சமுர்த்தி வெற்றிடங்கள் நிரப்பப்படும் -டக்ளஸ்

(தும்பளை)

யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு வெற்றிடங்கள் காணப்படுவதால் இம்மாத இறுதிக்குள் நியமனங்கள் வழங்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படுமென பாரம்பரியகைத்தொழில்கள்மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒன்று கூடல் நேற்று காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் அதிகமாக காணப்படுவதால் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நியமனம் வழங்கப்படவுள்ளதெனவும் தீவுப் பகுதிகள் மற்றும் தூர இடங்களில் பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அந்தப்பிரதேசங்களிலேயே இடமாற்றங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை திணைக்களத்திற்குள் உள்வாங்கியமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விற் கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் நன்றி தெரிவித்தார். (அ-3-19)

# கலாநிதி கலாமணியின் மணிவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பல்துறை வல்லோன் கலாநிதி த.கலாமணியின் மணிவிழாவும் சிறப்பு மலர் வெளியீடும் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் ஆரம்ப நிகழ்வான மங்கள விளக்கினை கலாபூசணம் வே.சிதம்பரநாதன், வைத்தியர் கே.ராதாகிருஷ்ணன், க.கணேசநாதன், கி.நடராஜா, வ.லக்குமிகாந்தன், ச.தர்மரத்தினம், வே.சேந்தன் ஆகியோர் ஏற்றிவைப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவிகளின் இறைவணக்கமும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.றொபேட் வழங்கும் தமிழ்தாய் வாழ்த்தும் இடம்பெற வுள்ளது.

இவ்விழாவின் வரவேற்புரையினை பாடசாலை அதிபர் வை.விஜயபாஸ்கர் வழங்கவுள்ளதோடு ஆசியுரைகளை சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்த ராஜகுருக்கள், பேராசிரியர் நா.பிலேந்திரன் , அருட்திரு. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகள், பேராசிரியர் க. சின்னத்தம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

மணிவிழா நாயகனுக்கான வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். பல்கலைக்கழகத்தின் உயர்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசியர் எஸ்.சத்தியசீலன், முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.யோகநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலை வர் பேராசிரியர் தி.விசாகரூபன், பிரபல எழுத்தாளர் தெணியான், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி அனுஷியா சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா, அல்வாய் மனோகரா சனசமூக நிலைய தலைவர் ந.துரைராஜா, கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம், முன்னாள் பிரதேச சபைச் செயலர் வே.சிவராஜலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்பு மலரின் வெளியீட்டுரையினை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் வழங்கவுள்ளார்.

நூல்களுக்கான நயப்புரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் வழங்கவுள்ளார்.

விழாவின் இறுதி நிகழ்வாக நன்றியுரையினை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் வி.செந்தூரன் ஆற்றுவார். (அ-5)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 38.5<br>தகைமை/தொழில்: BSc, MSc நில அளவையாளர் (அரச)<br>தொ.இ: B -1530 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>உயரம்: 5'5"<br>கி.பா: 48, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1559 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Management M.S.C (UK PR)<br>தொ.இ: B -1533 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா: 16.5, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: HNDA, NGO (தனியார்)<br>தொ.இ: G-1560 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 57, 1 இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: A/L, தொழில் நுட்பக் கல்லூரி (UK Not PR)<br>தொ.இ: B -1534 | பிறப்பு: 1976 றோ.க (குருகுலம்)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 46<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1564 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, (பிரான்ஸ் Not PR)<br>தொ.இ: B -1535 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'<br>கி.பா: 37.5, 12 இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: A/L, BA தேசிய சேமிப்பு வங்கி<br>தொ.இ: G -1665 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதத்தை பெரிதுபடுத்தினால் ராஜபக்ஷ தப்பித்து விடுவார்

## கி.வீரமணி தெரிவிப்பு

(கொழும்பு)

நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தனி ஈழத்தை வலியுறுத்தி வந்திருக்கிறோம். எங்களுக்கு பொது எதிரி இலங்கை அரசு. நமது முக்கிய பிரச்சினை ஈழத்தமிழர்களை எப்படி மீட்பது என்ற ஒரே அவாவாகும் என கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர் பிரச்சினை என்ற தலைப்பில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

தமிழ் ஈழ விடுதலைக்காக தொடங்கப்பட்டது டெசோ அமைப்பு. அது ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டுக்குள் எத்தனை போராட்டங்களை நடத்தி உள்ளது. பல இலட்சம் மக்களை இழந்த சூழ்நிலையில் உலகத்தின் பார்வைபட வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது தான் டெசோ அமைப்பு.

ஆனால் மாணவர்கள் எழுச்சியினால் தான் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை விட்டு விலகும் நிலையை எடுத்தது என்கிறார்கள். மாணவர்கள் போராட்டம் வரவேற்கத்தக்கது தான். அதேபோன்று கிராமத்தில் உள்ள குப்பன் சுப்பன் முத்தன் முனியனும் கூட தனி ஈழம் பொதுவாக்கெடுப்பு என்று கூறுகிறான்.

ஆனால் நமது தேசிய கட்சிகளுக்கு கூட தனி ஈழத்தையும் பொது வாக்கெடுப்பையும் கூற தகுதி இல்லை. அவர்கள் மனிதவுரிமை மீறலை மட்டுமே பேசுகிறார்களே தவிர தனி ஈழத்தை அல்ல. இதில் காங்கிரஸ், பாரதீய ஜனதாகட்சி, கம்யூனிஸ்டு கட்சிகள் அனைத்தும் ஒரே கருத்துடையதுதான்.

ஆனால் நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தனி ஈழத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம். நமது பேதத்தை பெரிதுபடுத்தினால் ராஜபக்ஷாக்கள் தப்பி விடுவார்கள். நமக்கு முக்கிய பிரச்சினை ஈழத்தமிழர்களை எப்படி மீட்பது என்பதுதான்என்றார். (அ-2)

# முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க வேண்டுமானால் முஸ்லிம்களின் மூன்று சிறுபான்மைக் கட்சிகளின் தலைமைகளும் ஒன்றிணைய வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் மிகவும் அமைதியாகவும் சகல இன மக்களோடு சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் சமூகத்திற்கு பேரினவாதிகள் பெரும் நெருக்கடிகளை கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

முஸ்லிம் சமூகத்தின் தொப்பிகளையும் அபாயாக்களையும் பாதுகாக்க வேண்டும் என்றால் எமது இந்த சிறுபான்மைக் கட்சிகளின் தலைமைகள் ஒன்றிணையவேண்டிய கட்டாயத் தேவைப்பாடு எமக்குள்ளது.

இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமை ரவூப் ஹக்கீமும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைமை ஏ.எல்.எம். அதாவுல்லாவும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமை றிசாட் பதியுதீனும் கூட்டிணைந்து ஒருமித்த கருத்துடன் செயற்பட முன்வாருங்கள். அடுத்த கட்டமாக இந்தப்பேரினவாதிகளுக்கு என்ன செய்வதென்பதை நாங்கள் காட்டுகின்றோம். (அ-2)

# ப.நோ.கூ.ச.கிளையை மூடநடவடிக்கை

(பூநகரி)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதால் ஊழியர்களுக்கு மாதாந்த வேதனத்தை வழங்க முடியாமல் இருப்பதாக நிர்வாகத் தலைவர் ந.சுந்தரமூர்த்தி தெரிவித்தார். இதற்கான மாற்று நடவடிக் கைகளை மேற்கொள்ள உள்ளதாக அவர் தெரிவித்தார். விற்பனை வீழ்ச்சி அடைந்து நட்டத்தில் இயங்கும் கிளைகளை மூடி பணியாளர் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-84)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அறுகு

**Botanical Name-**
**Cynodon Dactylon**
**Family-Gromineae**
**Engl-Couch Grass**
**Sinh- Ruha**

பூக்கும் ஒருவித்திலைத் தாவரம். தோன்றிய நாள் தொட்டு உயிருடன் வாழும் ஒரே உயிர் இந்த அறுகம்புல் தான். தரைக்கு அடியில் அறுகின் வெண்ணிற தரைமட்டத் தண்டு மிகவும் நீண்டு வளர்ந்து கொண்டிருக்கும். அடியில் உள்ள இலை தட்டையானது. மேலே உள்ள இலைகள் 4-4.7 அங்குல நீளமும் 0.03-0.11 அகலமும் இருக்கும். தனி மலர்கள் மலர்த்தண்டில் நேராக இணைந்துள்ளன. இருபாலான மலர்கள் உள்ளன. இவற்றை மிகச்சிறிய இரண்டு லொடிகுயூல் என்ற மலர் உமிகள் மூடியிருக்கும். சற்று நீண்டு தடித்த மிகச்சிறிய கனி- விதை- உண்டாகும்.

அறுகம்புல் பெரிதும் தரைமட்டத்திலிருந்து தான் வளரும். நுனியில் குருத்து மேல் நோக்கி வளர்ந்து வரும். இப்புல் இறவாமல் என்றும் நிலைத்து வளர்ந்து வாழ்வது எதனால் என்பதை ரஷ்ய நாட்டு உயிரியல் அறிஞர் குப்ரவிஷ் எனும் பேராசிரியர் (லை லோ ரஷ்யன் அக்டமி ஒப் சயன்ஸ்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இப்புல்லின் வளரும் குருத்தில் உள்ள செல்களை நுண்ணோக்கி மூலம் காணும் போது அவற்றில் செல்லின் கரு நியூக் கினியோஸ் (nucles) காணப்படும் அதிலுள்ள நியூக்கினியோலஸ் (nucleolus) என்ற உட்கருவை எலக்ரோன் நுண்ணோக்கி மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மடங்கில் பெரிதாக்கிப் பார்க்குமிடத்து அவற்றில் உள்ள குரோமோசோம்களில் (chromosome) டி.என். ஏ (D.N.A), ஆர்.என். ஏ (R.N.A) என்னும் மூலக்கூற்று அமிலங்கள் தென்படும். அவற்றில் பாரம்பரியத்தை தொட ரச் செய்யும் RNA அமிலத்தின் மூலக்கூறுகள் கணந் தோறும் சிதைத்துக் கொண்டு வருவதையும் அவற்றை உடனுக்குடன் சரி பார்த்து சீர்படுத்தும் அற்புதமான சுரப்பி நீர் (Hormones) .இம் மூலக்கூற்று அமிலத்தாலேயே உண்டாக்கப்படுகின்றன என்பதையும் அவையே சிதைந்து மூப்பைத் தரும் RNA அமிலத்தின் மூலக்கூறுகளை சிதையாமல் கணந் தோறும் செப்பனிடுகின்றன என்பதையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்து அறிந்துள்ளனர். இந்த அற்புத சுரப்பி நீர் வேறு எந்த உயிர்களின் நியூக்கினியோலஸ் களிலும் உள்ள RNA அமிலத்தினும் உண்டாவதில்லையாம். அதனால் வேறு எல்லஓ உயிர்களும் மூப்படைந்து சாகின்றன.

### மருத்துவக் குணங்கள்

1. அறுகம்வேரை கணுபோக்கி, 10 கிராம் அதை எடுத்து அத்துடன் வெண் மிளகு 5 கிராம் சேர்த்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை 15 நாட்களுக்கு ஒரு நாள் குடித்து வர உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

2. அறுகின் வேரை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து பசுவின் பால் 100 மில்லியில் கலந்து கொடுக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் குணமாகும்.

3. அறுகம் புல்லின் ஊறல் நீர் 100 மில்லி, 100 மில்லி பசுவின் பாலில் கலந்து குடித்து வர கண்நோய், தலைப்பாரம், கண் புதைத்தல் இவை குணமாகி, இரத்தம் சுத்தியாகும்.

4. அறுகம்புற்களை வேருடன் சேகரித்து நன்கு உலர்த்தி பொடித்து 5 கிராம் அளவு காலை, மாலை வெந்நீருடன் அருந்தி வர நீரிழிவு.நோயாளிகளுக்கு ஏற்படும் உடல் பலவீனத்தைக் குறைத்து உடற் பலத்தை அதிகரிக்கச் செய்யும்.

5. அறுகம்புல் வேரைக் காயவைத்து பொடி செய்து ஒன்றுக்கு 5 மடங்கு நல்லெண்ணெய் கலந்து சூடுபடுத்தி உடலில் தேய்த்து குளித்தால் தோல் நோய்கள் வராது.

6. அறுகம்புல்லை வேருடன் அரைத்து தினமும் 5 கிராம் அதை சாப்பிட்டால் மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும்.

7. அறுகம்புல்லை (15 கிராம்) தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து பால் (120 மில்லி) சர்க்கரை கலந்து குடித்து வந்தால் சிறுநீரக கோளாறுகள் நீங்கி சிறுநீர் நன்கு வெளிப்படும்.

8. அறுகம்புல்லை வேருடன் இடித்துச் சாறு எடுத்து தினமும் 60 மில்லி அதை குடித்து வந்தால் நீரிழிவு, ஆஸ்துமா, தலைப்பாரம் என்பன நீங்கும்.

9. அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி காய வைத்து பொடித்து 2 கிராம் அதை தினமும் சாப்பிட்டு வர தாது விருத்தி உண்டாவதுடன் ஆண்மைத்தன்மையும் அதிகரிக்கச் செய் யும்.


10. அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி சாறு எடுத்து 30 மில்லியினை தினமும் வெறும் வயிற்றில் குடித்துவர வயிற்றுப்புண் குணமாகும். அத்துடன் வெறும் வயிற்றில் அறுகம்சாறு குடித்து வந்தால் உடல் வளர்ச்சியும் அதிகமாக இருக்கும்.

11. அறுகம் புல் வேர்,சிறியாள் நங்கை வேர் இரண் டையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அதை சாப்பிட்டு வர நாட் பட்ட தோல் வியாதிகள் குணமாகும்.

12. அறுகம்புல், துத்தி இவை இரண்டையும் சம அளவு எடுத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அதை சாப்பிட்டால் தோல் மிருதுவாகி உடல் அழகு பெறும்.

13. அறுகம்புல் வேர் 2 கிராம், வெண்ணெய் 5 கிராம் அதை சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் வெட்டைச் சூடு, வெள்ளை படுதல் குணமாகும்.

அறுகம்புல்லில் காணப்படும் ஒரு வித புரதச் சத்தும் உடல்பலத்தை அதிகரிக்கச் செய்யும். வீட்டில் நீங்கள் பாயாசம் காய்ச்சும் போது அறுகம்புல் சாறு கலந்து காய்ச்சி அறுகன் பாயசமாக அருந்தி வர உடல்பலம்



அதிகரிப்பதோடு உடலின் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.

14. அறுகம்புல்லை வேருடன் பிடுங்கி மஞ்சள் சேர்த்து அரைத்து பூசி வர சொறி, சிரங்கு, படர்தாமரை நீங்கும். அல்லது அறுகம்புல், கஞ்சாங்கோரை, கடுக்காய்த் தோல் மூன்றையும் சம அளவு எடுத்து அதை நிழலில் உலர்த்தி பொடித்து மோர் இட்டு அரைத்து உடலில்பூசிவர சொறி, சிரங்கு, படர்தாமரைநீங்கி தோல்மிருதுவாகவும்பளபளப்பாகவும்அமையும்.

### அறுகம்புல் டொனிக்

அறுகம்புல் 3 கப்
தேன் 1/2 லீ
பசு நெய் 100 கிராம்

இரும்பு வானலியில் அறுகம்புல் சாறு, தேன், நெய் கலந்து சிறு தீயிலிட்டு விறகடுப்பில் வைத்துக் காய்ச்சி பாகுப்பதம் வந்து நீரின் சடசடப்பு அடங்கியதும் 5 நிமிடம் கழித்து இறக்கவும்.இதனை ஒரு வாரம் வெயிலில் வைத்து எடுத்து (சூரியபுடம்) பின்பு தினமும் காலை மாலை ஒரு தேக்கரண்டி குழந்தைகட்கு கொடுத்து வரவும்.இதனால் கணச்சூடு நீங்கி குழந்தைகள் சுறுசுறுப்பாக வருவார்கள். குழந்தைகட்கு நோய்கள் அடிக்கடி வராமல் உடலை பாது காத்துக் கொள்ளும் சிறந்த டொனிக்காகும்.

சிவத்தப்பச்சரசி மாவும் சிறிதுசிறிதாக அரிந்த அறுகம்புற்களை சேர்த்து தேங்காய்ப்பூ, சர்க்கரை சேர்த்துக் குழைத்து அடையாக தட்டி நெய்யில் பொரித்து எடுத்து சாப்பிட்டு வர (அறுகம்புல் அடை) இரத்தம் சுத்தியாக, இரத்தத்திலிருந்து உண்டாகி உடல் பலம் பெறும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

### அறுகம் புல் பாயாசம் (வேறுமுறை)

### தேவையான பொருட்கள்

அறுகம்புல் சுத்தம் செய்து அலசி பொடியாக அரிந்தது ஒரு கப், பசுப்பால் அரை லீற்றர், கசகசா இருபத்தைந்து கிராம், நாட்டு சர்க்கரை 300கி, ஏலக்காய் ஆறு, பச்சை கற்பூரம் ஒரு சிட்டிகை, முந்திரிப்பருப்பு நூறு கிராம், காய்ந்த திராட்சை நூறு கிராம், குங்குமப் பூ பத்துக்கிராம், உப்பு ஒரு சிட்டிகை, பசு நெய் இருபது மில்லி

### செய்முறை

அறுகம்புல்லை முதலில் மைய அம்மியில் வைத்து அரைக்க வேண்டும். கசகசாவை மை போல அரைக்க வேண்டும். பாலை அடுப்பில் ஏற்றி மேற்குறித்த இரண்டையும் இட்டுகால் லீற்றரில் கர ண்டியால் கிண்டிக் கொண்டே இருக்க வேண் டும். சர்க்கரையைப் போட்டு பச்சைக கற் பூரத் தை தூள்செய்து போடவேண்டும். ஏல க்காயை தூள் செய்து போட வேண்டும். குங் குமப் பூவை போட்டு கிளறிக் கொண்டே இறக்கி வைக்கவும். இந்தப் பாயாசத்தை சாப்பிட ருசியாகவும், நன்கு மணமாகவும் இருக்கும்.

### இதன் பயன்

இந்த பாயாசத்தை காலை மாலை வெறும் வயிற்றில் இளம் சூட்டில் அருந்த வேண்டும். அப்படி அருந்தினால் குடல், உடல், கண்கள் அனைத்தும் குளிர்ச்சி அடையும். மாலை வேளை நண்பகல், இரவு படுக்கப்போகும் போதும் கோடை காலங்களில் அருந்தி வர கோடை கட்டி, அம்மை நோய், அக்கி, இருமல், கண் எரிச்சல் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுவதை விரும்பாத சக்திகள் தனிநாடு கோருகின்றன

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுவதை விரும்பாதவர் தனிநாடு பற்றிய தூண்டுதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீடமைப்பு மற்றும் நிர்மாண பொறியியல் துறை அமைச்சருமான விமல் வீரவன்ச குற்றச்சாட்டியுள்ளார். யாழ். குருநகர் தொடர்மாடி வீடமைப்பு திட்டத்தின் புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.**

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தின் போது பல ஆயிரக்கணக்கான உயிர்களை பறி கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களும் எமது இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர். இரு தரப்பிற்கும் பாதிப்பும் ஏற்பட்டது. இரு தரப்பிலும் போன உயிர்களை மீண்டும் திருப்பி தர முடியாது. அது துரதிர்ஷ்டவசமாக இடம் பெற்றது. இருப்பினும் உயிரிழப்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு ஏற்பட்டிருந்தாலும் இராணுவத்தினருக்கும் ஏற்பட்டிருந்தாலும் உயிரிழப்பு மனவேதனையை தருகின்றது.

ஆனாலும் யுத்தகாலத்தில் பாதிப்படைந்த கட்டடங்களையும் மக்களின் இயல்பு வாழ்க்கையினையும் மீளக் கட்டியெழுப்ப முடியும். யுத் தத்தினால் கட்டடங்கள் மட்டும் சிதைவடையவில்லை. மனித இதயங்களும் சிதைவடைந்து பாதிக்கப்பட்டுள்ளன.

கட்டடங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை குறுகிய காலத்திற்குள் மறைத்து விடமுடியும். ஆனால், மனித இதயங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை மறைப்பதற்கு அல்லது மறப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாண பொறியியல் துறை அமைச்சராக ஜனாதிபதி என்னை நியமித்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களை முன்னுரிமை அடிப்படையில் புனரமைத்து கொடுக்குமாறு எனக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு தற்போது 100 மில்லியன் செலவில் இந்த குருநகர் கட்டடத் தொகுதி புனர்நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியுதவி மூலம் இத்தொடர் மாடிக் கட்டடத் தொகுதியை முழுமையாக புனர்நிர்மாணம் செய்ய முடியும். அத்தோடு இங்குள்ள சனசமூக நிலையத்தினையும் புனரமைத்து தருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தவிர கழிவு நீர் ஓடும் வடிகான் மற்றும் மலசல கூட வசதிகள் என்பனவும் செய்து தரப்படும். இந்த வருட இறுதிக்குள் புதிய கட்டடத் தொகுதியில் குடியிருக்கும் மன நிலையை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கட்டடத் தொகுதி புனர்நிர்மாணப்பணி முன்னெடுக்கப்படும்.

மேலும் கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திற்கு வந்தபோது இருந்ததை விட பல மடங்கு பௌதீக வளங்களை யாழ். மாவட்டம் பெற்றுள்ளது. வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தின் பின்பு மிகவும் விரைவாக மீள் நிர்மாணம் பெற்று வருவதை அவதானிக்க முடிந்தது. எனவே, மறுபடியும் கூறுகின்றேன் யுத்தத்தினால் கட்டடங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை எவ்வாறு விரைவாக மறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதோ அதேபோன்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இதயங்களையும் குணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இங்குள்ள சிலர் இதயங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை ஆழமாக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்ததோடு கடந்த கால யுத்தத்தில் எழுந்த பிரச்சினைகளை மறந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இயல்பு நிலையை குழப்பி பரம்பரையாக தமிழ், சிங்கள இனங்களுக்கிடையில் ஒற்றுமை தொடர தடையாகவும் இருந்து வருகின்றனர். இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாகாண சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ-6)





# பொதுபல சேனாவிற்கு அரசாங்கம் நேரடியாக ஆதரவளிக்கவில்லை

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

இலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்ற பொதுபலசேனா என்ற கடும்போக்கு பௌத்த அமைப்புக்கு அரசாங்கம் நேரடியாக ஆதரவளிக்கிறது என்று கூற முடியாது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஆனால், அரசாங்கத்தில் பொதுபல சேனாவை ஆதரிக்கின்ற ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, பொதுபலசேணா அமைப்பே தங்களுக்கு அரசாங்கத்துடன் தொடர்பில்லை என்று கூறியிருப்பதாகவும் அதேபோல அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூட அந்த அமைப்பை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும் என்று கோரியிருப்பதாகவும் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் பேட்டி, பொதுபலசேனாவின் விழாவொன்றில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கலந்து கொண்டிருந்தார். அந்நிகழ்வில் அவர் கலந்துகொள்ளக்கூடாது என்று முஸ்லிம் அமைச்சர்கள் முன்கூட்டியே கேட்டுக் கொண்டிருந்ததாகவும் றிசாத் கூறினார்.

இதேவேளை, முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ள அமைச்சரவை உபகுழு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூடியுள்ளது.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தலைமையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் அதாவுல்லா ஆகியோருடன் தானும் அமைச்சர் சம்பிக்கரணவக்க, அமைச்சர் டியூ.குணசேகர, அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் அமைச்சர் றிசாத் கூறினார்.

பொதுபல சேனா மற்றும் சிங்கள ராவய போன்ற கடும்போக்கு பௌத்த அமைப்புகளால் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதாகவும் ஹலால் உணவு முறைக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்றும் முஸ்லிம் உலமா சபையை இழிவுபடுத்தும் விதமாக அந்த அமைப்புகள் கருத்து வெளியிடுவதை நிறுத்த வேண்டும் என்றும் தாங்கள் கேட்டுக்கொண்டதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் பொலிஸாரால் கைது

யாழ் மாநகர சபை ஊழியர்களை தாக்கிய கும்பலில் மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி டபிள்யூ. எல்.விக்கிரமராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள மீன் சந்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடமையில் ஈடுபட்டிருந்த யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கும் மற்றும் அங்கு நின்ற நபர்களுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இவ்வாக்குவாதம் முற்றியதில் யாழ். மாநகரசபை சுகாதார ஊழியர்களை அவர்கள் வளால் வெட்டியதுடன் பொல்லாலும் தாக்கியுள்ளனர் என யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது. இவ் வாள்வெட்டில் காயமடைந்த ஐவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனையடுத்து யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு விசாரணையை தொடர்ந்து தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-4)

## பிரதேச விளையாட்டு இறுதி நாள் நிகழ்வுகள்

(கரவெட்டி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் வல்வெட்டிகளுக்கு விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி என். மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் இறுதி விளையாட்டு நிகழ்வில் தடகள இறுதிப் போட்டிகளும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து வல்லை அணியும் மோதவுள்ளது. (அ-3-24)

## யாசகம் செய்தவர்கள் முதியோர் இல்லத்தில்

(கரவெட்டி)

வல்லை முனியப்பர் ஆலயத்தில் நீண்ட நாட்களாக யாசகம் செய்து வந்த இரு வயோதிபர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை கைதடி முதியோர் இல்லத்தில் வைத்து பராமரிக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலயத்தில் நீண்ட நாட்களாக யாசகம் செய்து வந்த இரு வயோதிபர்களை நேற்று முன்தினம் கைது செய்த நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த இரு வயோதிபர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை கைதடி முதியோர் இல்லத்தில் வைத்து பராமரிக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை கைவிட்டுவிட்டனர்

## முஸ்லிம் மக்கள் கட்சி தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் அரசுக்கு பாடம் கற்பிக்கக் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை தவற விட்டுவிட்டு இன்று பரிதவிக்கும் நிலை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது என முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரித்துள்ளார்.**

கல்முனையில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

தம்புள்ள பள்ளிவாசல், தெஹிவல, குருநாகல் பள்ளிவாசல் தாக்குதல், அதனை நடத்தியவர்கள் எவருமே கைது செய்யப்படவில்லை என்பதன் மூலம் எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படப் போகும் விபரீதத்தை அறியும் அறிவை எமக்கு இறைவன் தந்தான். இதனாலேயே நாம் அரச ஆதரவிலிருந்து விலகினோம்.

அத்தோடு கிழக்கு மாகாண சபை தேர்தல் வந்த போது இந்த அரசுக்கும் பள்ளிவாசல் தாக்குதல்களை கட்டுப்படுத்தாத அரசிற்கு சார்பாக நடக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் ஏனைய காங்கிரசுகளுக்கும் பாடம் கற்பிப்பதாயின் அரசுக்கு எதிரான ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் மட் டுமே நமது எதிர்ப்பை உலகுக்கு காட்ட முடி யும் என மிக தெளிவாக கூறினோம்.

தேர்தல் முடிந்ததும் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என கூறினோம்.

இவ்வாறு கூறியதற்காக நாம் கடுமையாக மிரட்டப்பட்டோம். அதையும் கூட முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சுப் பதவிகளுக்காக விட்டுக் கொடுத்து சோரம் போய்விட்டது.

இப்பொழுது கிழக்கு மாகாண சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப் போவதாக மக்களை மீண்டும் உஷார் மடையர்களாக்க முனைகிறார்கள். பாராளுமன்றத்தில் ஒரு கண்டனம் கொண்டு வருவது என்பது முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

ஒரு சிறிய கட்சியாக இருந்து கொண்டே பொது பலசேனாவை கண்டித்து கூட்டம் நடத்தி கண்டன தீர்மானத்தையும் பகிரங்கமாக நிறைவேற்றிக் காட்டிய முதலாவது முஸ்லிம் கட்சியினர் நாமே. இப்படி ஒரு கண்டனக் கூட்டத்தை தமது கட்சித் தலைமையில் நடத்த துணிவற்ற இவர்கள் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றுவது என்பது பச்சையான ஏமாற்று நடவடிக்கையாகும். முடிந்தால் இவர்கள் பாராளுமன்றத்தில் கண்டன தீர்மானம் கொண்டு வாருங்கள் என நாம் இவர்களுக்கு சவால் விடுகிறோம். இன்று சிலர் சுயநல ஏமாற்றுக்கட்சிகளுடன் இணைந்து மக்களை ஏமாற்றிவிட்டு அமைச்சர்களை இராஜினாமா செய்யக் கோரும் கோமாளித்தனத்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் முஸ்லிம்களும் சந்தர்ப்பத்தை தவற விட்டுவிட்டு வானத்திலிருந்து விமோசனம் வருமா என தவித்துக் கொண்டிருக்கிறது.

ஆகக் குறைந்த இப்படிப்பட்ட ஏமாற்றுக் கட்சிகளின் உயர் பீட அங்கத்தவர் அல்லது சாதாரண அங்கத்தவர் என்ற பதவிகளையாவது பகிரங்கமாக இராஜினாமா செய்ய முடியாத நிலையில் பொது மக்கள் இருக்கும் போது எவ்வாறு அமைச்சர்கள் தமது உல்லாச அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதை எதிர்பார்க்க முடியும்.

இன்று அனைத்து சமூகத்தின் மத்தியிலும் ஆளுங்கட்சியும் உண்டு. எதிர்க்கட்சி யும் உண்டு. இதனால் இருபக்க நன்மைகளை அவர்கள் அடைகிறார்கள்.

முஸ்லிம் சமூகத்தில்தான் முஸ்லிம்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சி ஒன்று இல்லை. இதனால் இருபக்க நன்மை என்ன? ஒரு பக்க நன்மையுமின்றி அடிமை வாழ்க்கை வாழ வேண்டியுள்ளது. ஆகவேதான் எம்மோடு இணைந்து சுயநல ஏமாற்றுக்கட்சிகளை எதிர்க்க முன்வரும் மக்களை அழைக்கிறோம் என முபாரக் மௌலவி தெரிவித் தார். (அ-2)

# அரசியல் நடவடிக்கை குறித்து தெளிவுபடுத்தவுள்ளேன்-சரத்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் ஜனநாயக முன்னணி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் தமது அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகா ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது ஜனநாயக முன்னணி இலங்கையின் அரசியல் கட்சிகளின் பட்டியலில் நேற்று உத்தியோகபூர்வமாக சேர்க்கப்பட்டது. ஏற்கனவே அவர் ஒருமுறை இதற்கு மனு தாக்கல் செய்திருந்த போதும் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அதனை ஏற்க மறுத்தார்.

தொடர்ந்து அவர் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து, புதிய மனுவொன்றை தேர்தல்கள் திணைக்களத்தில் சமர்ப்பித்திருந்த நிலையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது கட்சி அரசியல் கட்சியாக பதிவு செய்யுப்பட்டுள்ளமை தமது அரசியல் செயற்பாட்டில் முக்கிய மைல்கல் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் ஊடக சந்திப்பு ஒன்றில் தமது அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் அறிவிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாதாந்த சந்திப்பை விரைவில் நடத்துக!

(ஆனையிறவு)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு மாதத்திற்கு ஒரு தடவை இடம் பெற்றதெனவும் இவ்வாண்டு சந்திப்பு இடம்பெறவில்லை எனவும் கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு கடந்த வருடம் மாதத்திற்கு ஒரு தடவை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்று வந்தது.

ஆனால் இவ்வருடம் இன்னமும் அச்சந்திப்பு இடம்பெறாமையால் கடற்றொழிலாளர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத நிலை உள்ளதென கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இக்கலந்துரையாடல் இடம்பெற ஆவன செய்ய வேண்டுமென கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)

# பெசன் பக் தாக்குதல் விவகாரம்; பௌத்த பிக்குகள் மூவர் கைது

பெப்பிலியான பெசன் பக் வியாபார நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் மூன்று பௌத்த பிக்குகள் சரணடைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் மூவரும் பாணந்துறை பகுதியில் உள்ள பொதுபல சேனா அமைப்பை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் சம்பவம் வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.டிவி கமெராக்களில் பதிவாகி இருந்தது. இதில் குறித்த மூன்று பௌத்த பிக்குகளும் அடையாளம் காணப்பட்டனர். அவர்களை நேற்று முன்தினம் நண்பகலுக்கு முன்னதாக சரணடையுமாறு பொலிஸார் அறிவித்திருந்த போதும் அன்றைய தினம் மாலையே சரணடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 18 பேர் தற்போது பொலிஸ் தடுப்பில் உள்ளனர். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

# பணத்திற்கு பேராசைப்பட்டு இனத்தைக் காட்டிக்கொடுக்காதீர்

## பொதுபல சேனா கோரிக்கை

(கொழும்பு)

பணத்திற்கு பேராசைப்பட்டு இனத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் என இலங்கை கிரிக்கெட் வீரர்களிடம் பொதுபல சேனா கோரியுள்ளது.

பன்னலவில் நடைபெற்ற நிகழ்வில் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பணத்திற்கு ஆசைப்பட்டு இந்தியாவிற்கு சென்று கட்டுநாயக்கவில் அழுகிய முட்டை தாக்குதலை சந்திக்க வேண்டாம் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் போட்டித் தொடரில் பங்கேற்கும் வீரர்களிடம் பொதுபல சேனா அமைப்பு மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இலங்கை ஓர் சுயாதீனமான நாடு. ஈழ இராச்சியத்தை அமைக்க வேண்டுமாயின் அதனை தமிழகத்தில் அமைத்துக் கொள்ள முடியும். இந்த நாட்டிற்குள் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த பௌத்த பிக்குகள் இடமளிக்கமாட்டார்கள்.

நாட்டுக்கு சேவையாற்றாத வாசுதேவ நாணயக்கார எம்மை தடை செய்ய முயற்சி செய்கின்றார். அது ஒருநாளும் நிறைவேறாது. அமைச்சர் வாசுதேவ இரண்டு வாரங்களுக்குள் சிங்கள மொழிக்கு முக்கியத்துவம் அளித்து கொள்கை ஒன்றை அமைக்க வேண்டும்.

பல இலட்ச ரூபா செலவில் புத்தர் சிலைகளை அமைப்பதனை விடவும் முதுகெலும்புடைய பௌத்த பிக்குகளே இந்த நாட்டுக்கு தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒழுங்குபடுத்தலில் சீன புகையிரத சேவை இல.5,பொறியிலாளர் குழுவினால் யாழ். ஹாட்லி கல்லூரிக்கு கூடைப்பந்துகள் வழங்கும் வைபவம் அண்மையில் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்றிட்ட நிர்வாகி உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினை பெருவினையாகி.... தி.மு.கழகத்தை அழித்துவிடும்!

டெல்லியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறியிருந்தாலும், உள்கட்சி பிரச்சினையில் தி.மு.க. திணறிக் கொண்டிருக்கிறது. "பயணிப்பதற்கு பாதை கிடைத்து விட்டது. ஆனால் வழி எல்லாம் முள்ளும், புதருமாக கிடக்கிறது" என்பதுபோல், காங்கிரஸை விட்டு விலகியதால் தி.மு.க.விற்கு "தேர்தல் பாதை" தெளிவாகிவிட்டது. ஆனால் அந்த பாதையில் உள்கட்சி பூசல் முள்ளும், புதருமாக காட்சியளிக்கிறது. தன்னுடைய வேகத்திற்கு பயணிக்க முடியாத இரண்டாம் கட்ட தலைமையை வைத்துக்கொண்டு எப்படி நாடாளுமன்ற தேர்தலை சந்திப்பது என்ற நெருக்கடியில் இருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

காங்கிரஸிடமிருந்து விலகியது தி.மு.க. தலைவர் கருணாநிதி எடுத்த முடிவு. அது இன்று எடுத்த முடிவல்ல. ஒரு சீனியர் லீடர் சொல்வது போல், "எங்கள் தலைவர் 2011 மே மாதம் 16ஆம் திகதி தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்த நேரத்திலேயே 2-ஜியையும் (ஸ்பெக்ட்ரம் முறைகேடு விவகாரம்), இலங்கை தமிழருக்கு எதிரான போரையும் கொண்டு வந்து நம் கட்சியை காங்கிரஸ்காரர்கள் கவிழ்த்து விட்டார்கள். இனி அவர்களுடன் கூட்டணி வைத் துக் கொள்ளக்கூடாது என்று அறிவித்தார். அதன் முதல்கட்டம்தான் சட்டமன்ற தேர்தல் முடிந்தவுடன் நடைபெற்ற உள ளாட்சி தேர்தலில் தி.மு.க. தனித்து போட்டியிட்டது" என்ற அவர், "ஆனால் இப்போது காங்கிர ஸிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும் என்று நெருக்கடி கொடுத் தது மு.க. ஸ்டாலின் என்பதுபோல், பிரசாரத்தை கிளப்பிவிட்டார்கள். தி.மு.க.வை பொறுத்தவரை இன்னமும் தலைவர்தான் முடிவு எடுக்கிறார்.



அதை செயல்படுத்தும் இடத்தில் மட்டுமே மற்றவர்கள் இருக்கிறோம்" என்று "பொடி" வைத்து பேசினார். இந்த சீனியர் லீடரின் கருத்தை வலியுறுத்தும் வகையில், "காங்கிரஸிலிருந்து தி.மு.க. விலகியது ஸ்டாலின் எடுத்த முடிவு" என்று செய்தி வெளியிட்ட பத்திரிக்கையை கண்டித்து தி.மு.க. தலைவர் கருணாநிதியே அறிக்கை விட்டார்.

இந்த சர்ச்சை முடிந்த கையோடு மத்திய அமைச்சராக இருந்த மு.க. அழகிரி விவகாரம் வெடித்தது. "அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்யும் முடிவை தன்னிடம் கேட்காமல் எடுத்து விட்டீர்கள்" என்ற கோபத்தில் பிரதமரை சந்தித்து ராஜினாமா கடிதம் கொடுக்கப்போன தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலுவுடன் செல்ல மறுத்தார். பிரதமர் அலுவலகத்தில் பாலு தரப்பினர் இருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொண்ட அழகிரி அங்கேயுள்ள மத்திய அமைச்சர் நாராயண சாமி அறையில் அமர்ந்து விட்டார். பாலு தலைமையில் உள்ளவர்கள் கடிதத்தை கொடுத்து விட்டுச் சென்ற பிறகு, அழகிரி தன்னுடன் இன்னொரு அமைச்சர் நெப்போலியனை அழைத்துக் கொண்டுபோய் ராஜினாமா கடிதத்தை கொடுத்தார். மு.க. அழகிரி தனக்கு பொலிஸ் பாதுகாப்பு கேட்பதற்காகவே அப்படி தனியாக சந்தித்தார் என்ற தகவலும் உண்டு. அதை நிரூபிக்கும் வகையில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவுப்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகிய அழகிரிக்கு பொலிஸ பந்தோபஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி கட்சியின் குழுத் தலைவருடன் சென்று ராஜினாமா கடிதத்தைக் கொடுத்ததைக் கூட தலைமை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அதன் பிறகு நடைபெற்ற தி.மு.க. செயற்குழு கூட்டத்திற்கும் அவர் வரவில்லை. இத்தனைக்கும் மத்திய அரசிலிருந்து வெளியேறிய முடிவை "அப்ரூவ்" பண்ண போடபபட்ட செயற்குழுக்கூட்டம் இது. மதுரைபோன அழகிரி "செயற்குழு கூட்டத்தில் எவ்வளவு பேர் கலந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர் களில் நானும் ஒருவன்" என்று சர்வசாதரணமாக பதில் சொல்லிவிட்டு அமைதியாகி விட்டார்.

இதன்பிறகு நடைபெற்ற ஒரு சம்பவம் தி.மு.க. தலைவர் கருணாநிதியை ரொம்பவும் டென்ஷனாக கியது. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் தி.மு.க.வின் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநிலத் தலைவராக இருக்கும் கனிமொழி கலந்து கொள்ளும் கூட்டம். அதற்கு முன்கூட்டியே மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பொன்முடியிடம் அனுமதி வாங்கப்பட்டிருந்தது. ஆனால் கூட்டம் நடைபெறும் தினத்தில் பொன்முடி நேராக கலைஞர் கருணாநிதியிடம் சென்று, "என்னிடம் அனுமதி பெறாமலேயே கூட்டத்திற்கு வருகிறார் கனிமொழி" என்று புகார் சொல்ல, அதை தி.மு.க. பொருளாளர் ஸ்டாலினும் வழிமொழிய விவாதம் சூடுபிடித்தது. இறுதியில், "உன்னால் பிரச்சினை வரும் என்கிறார்கள். நீ அக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம்" என்று கனிமொழிக்கு அட்வைஸ் பண்ணினார் தி.மு.க. தலைவர். இதனால் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட அக்கூட்டத்தில் கனிமொழி கலந்துகொள்ள முடியாமல் போனது. கனிமொழி கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு கட்சிகுள் இப்படி அடிக்கடி "தடை" போடப்படுகிறது என்பது கனிமொழி ஆதரவாளர்கள் மத்தியில் குமுறிக் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தில் தி.மு.க. தலைமை ரொம்பவுமே அப்செட் ஆனது. இதன் பிறகு நடைபெற்ற தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் பேசிய கட்சி தலைவர் கருணாநிதி, "உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். அது ஒற்றுமையாக இருங்கள். ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுங்கள். நம்மவர்களையே எதிரிகள் போல் கருதாதீர்கள். ஏனென்றால் "பிரிவினை" பெருவினையாக மாறி தி.மு.க.வையே அழித்து விடும்" என்று எச்சரிக்கை விடும் தொனியில் பேசினார். இதை தன் அருகில் ஸ்டாலினை வைத்துக் கொண்டு பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)




# மாமன்னன் சங்கிலியன் 03




## உறக்கமற்ற நீண்டஇரவு

தாய் கூறுவது உண்மைதான். சங்கிலியின் தந்தை பரராசசேகருக்கு மூன்று மனைவியர். மூத்த மனைவி இராஜலக்குமி அம்மாள் பட்டத்துராணி, சோழவம்சத்தைச்சேர்ந்தவள், அவர்களுக்கு சிங்கபாகு, வீரபண்டாரம் என இரு மைந்தர்களும் மாணிக்கநாச்சியார், ராஜநாச்சியார் என இரு புதல்விகளும் இருந்தனர். அவர்களில் ஒருத்தியான மாணிக்கநாச்சியார் திருகோணமலை வன்னியனான கோகர்ண வன்னியனைக் கட்டியிருந்தாள். மன்னரின் இரண்டாவது மனைவி வள்ளியம்மை தேவிக்கு பரநிருபசிங்கன் என்



செங்கை ஆழியான்

றொரு மகனும் வடிவம்மை என்றொரு மகளும் இருந்தனர். வள்ளியம்மை தேவி பாண்டிமழவன் குடும்பத்தைச் சேர்ந்தவள். மூன்றாவது மனைவி மங்கத்தம்மாள். அரசர் பரராசசேகரரின் காதல் கிழத்தி ஆவார். அவர்களுக்கு பெரிய பிள்ளை, சங்கிலி, பரவை என மூன்று பிள்ளை



கள்.

இந்த சங்கிலியே இன்றைய மன்னன், தான் இந்த முடியைப் பெறுவதற்கு பட்டபாட்டை சங்கிலி எண்ணிக் கொண்டான். அதற்கு அவனது இட்ட நண்பன் கனகராஜன் துணையாக இருந்தான். மாலை நேரங்களில் அவர்கள் பண்ணைத் துறைக் கடற்கரையில் சந்தித்து கனவு காண்பார்கள். மன்னனுக்கு நினைவு வருகின்றது.

மார்கழி மாதத்துக் குளிர் தேயா நள்ளிரவு, பண்ணைத் துறை அமைதியின் மடியில் கிடந்தது. கடற்கரை ஓரத்தில், ஆங்காங்கே வளர்ந்திருந்த தென்னை மரங்கள் ஓலைகளை நிலமகளை நோக்கி வளைத்திருந்தன. தூரத்தில் பசிகிடவா நரியொன்று ஊளையிட்டது. இக்கடற்கரையில் சங்கிலியும் கனகராஜனும் அன்று அமர்ந்திருந்தனர்.

“கடல் உங்களைக் கண்டு ஆரவாரிக்கின்றது இளவரசே” என்றான் கனகராஜன்.

“என்னைக் கண்டுதான் [illegible] தெரியுமா?”

“எதற்கு?”

சங்கிலி தொடர்ந்தான்.

“எதற்கா... கேள். யாழ்ப்பாண அரசை பகை மேகம் மூடியிருக்கிறது. கையாலாத இளவரசன் ஒருவன் கடற்கரை மணலில் மணற்கோட்டைகளைக் கட்டி வீணே காலத்தைக் கழிக்கிறானே என கேலி செய்கிறது. பொங்கி யெழும் அலைகள் என்னைக் கேலி செய்கின்றன”

“ஏதாவது தவறுதலாகக் கூறிவிட்டேனா?”

“இல்லை கனகராஜா...” சங்கிலி தொடர்ந்தான்.

“என்னிதயத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் தீயை இந்தக் கடலின் ஆரவாரம் நெய்யாகத் தூண்டுகிறது. கேள் கனகராஜா. ஈழத்தின் வட கோடியில் இருக்கும் இச்சிறிய நாட்டை தந்தை ஆள்கிறார். தெற்கே வன்னியர்கள். அவர்கள் திறைசெலுத்திலும் ஏப்பம்விடக் காத்திருக்கிறார்கள். அதற்கும் அப்பால் சிங்கள மன்னர்கள், தீவைச் சுற்றியுள்ள நாட்டை சமுத்திரத்தில் வியாபாரக் கப்பல்களுடன் மதத்தை பரப்பவும் நாட்டைப் பிடிக்கவும் போர்த்துக்கேயப் பறங்கிகள் திரிகின்றனர். தென்னிலங்கையில் இவர்களது ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறதாம். தீவுகளின் கால்நடைகளை வன்னியர் கொள்ளையடிக் கின்றனர். அடக்க முடியவில்லை. வன்னியர்களை அடக்க வேண்டும் என்றோ படைப் பலத்தை அதிகரிக்க வேண்டு மென்றோ தந்தைக்கு நினைவில்லை. பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார். இராசமடப் பள்ளி வன்னியன், தான் செய்ததாக ஒத்துக் கொண்டான். இரண்டாவது பட்டத்து இளவரசர் வீரபண்டாரம் கவலையில்லாமல் திரிகிறார். அவருக்கு யாது நடக்குமோ? அண்ணர் பரநிருபசிங்கர் கவலை ஏதுமின்றி கண்டிக்குச் சென்றுள்ளார். கண்டி மன்னர் வீரபாகுவின் மனைவியின் பிணி தீர்க்கச் சென்றுள்ளார். எனது முன்னோர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் போன்று யாழ்ப்பாண இராச்சியத்தை மாற்ற வேண்டுமென நான் கனவு காண்கிறேன். அந்த ஆசைக் கனவுகளோடு நான் குமுறிக்கொண்டிருக்கிறேன்”

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா கதைகள்

# தன் கையே தனக்கு உதவி



ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பாபி சிறுவயதிலேயே பெற்றோரை இழந்ததால் பாட்டியின் அரவணைப்பில்தான் முழுக்க முழுக்க வளர்ந்தான். தாய், தந்தையில்லாப் பிள்ளை என்பதால் பாட்டி அவனுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்தாள். அவனை எந்த வேலையும் செய்யவிடாமல் தானே எல்லாம் செய்து வந்தாள். காலையில் அவனை எழுப்பி விடுவது, பல் தேய்ப்பது, குளிப்பது, உணவு அருந்துவது முதல் இரவு படுக்கும் வரை அவ்வளவு வேலைகளையும் பாட்டியே செய்தாள். பாடசாலைக்கு அழைத்துச் சென்று வீட்டுக்கு அழைத்து வருவது, பாடம் சொல்லித்தருவது போன்ற வேலைகளும் பாட்டியே செய்தாள்.

பாபி பாடசாலையில் அவ்வளவு நன்றாகப் படிக்காததால் ஆசிரியர்கள் பாட்டியிடம் அடிக்கடி புகார் செய்தனர். தவிர, பாபி எல்லாவற்றுக்கும் தன் பாட்டியையே சார்ந்திருப்பது பாடசாலையில் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. பேரனின் இந்தப் பலவீனத்தைத் திருத்த பாட்டி முய ன்றும் முடியவில்லை.

அந்த ஆண்டு பாபியின் பாடசாலையில் அரக்குவேலி என்ற இடத்திற்கு உல்லாசப் பயணம் செல்லத் திட்டமிட்டனர். பாபிக்குப் பாட்டியை விட்டுத்தனியாகச் செல்ல இஷ்டம் இல்லை. ஆனால் எல்லா மாணவர்களும் வரவேண்டும் என்று ஆசிரியர் கட்டாயப்படுத்தியதால் பாபி வேண்டா வெறுப்பாக சுற்றுலாக் குழுவினருடன் சேர்ந்து பயணம் ஆனான்.

பஸ் மலையின் அபாயகரமான வளைவுகளில் சென்றபோது மாணவர்கள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து முட்டிக்கொண்டனர். மலையின் உச்சியில் இருந்து கீழே பார்க்கையில் தென்பட்ட அற்புதமான இயற்கைக்காட்சிகள் அவர்களைப் பரவசப்படுத்தின. தங்கள் பக்கத்தில் ஆசிரியர்கள் இருப்பதுகூட மறந்து அவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். அத்தனைபேரிலும் பாபி மட்டும் தனித்திருந்தான். மற்றவர்களைப் போல் கூச்சலிடாமல் சிலை போல் உட்கார்ந்து வந்தான்.


தங்களுடைய உற்சாகத்தில் பங்கு கொள்ளாமல் உம் என்று மௌனமாக இருந்த பாபியை ஏனைய மாணவர்கள் கிண்டல் செய்து கொண்டே வந்தனர்.

என்ன பாபி உன் பாட்டி ஞாபகம் வந்துவிட்டதா? பாட்டியைக்கூடவே அழைத்து வந்திருக்கக்கூடாதா? பாட்டி ஊட்டிவிடாமல் எப்படிச் சாப்பிடுவாய் என்றெல்லாம் கேலி செய்தனர். பாபி அவமானத்தாலும் கோபத்தினாலும் துடித்தான். ஆனால் அவர்களை



எதிர்த்துப் பேசவில்லை.

பஸ் அரக்குவேலியை அடைந்ததும் மாணவர்களை முதலில் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றனர். எல்லோரும் குசியுடன் இரைச்சல் போட்டுக்கொண்டே காலை உணவைச் சாப்பிட்டனர். ஆனால் பாபிக்குப் பாட்டியில்லாமல் தானே தனியாக சாப்பிடக்கூட தெரியவில்லை. உணவை மேலெல்லாம் சிந்திக்கொண்டே சாப்பிட்டான். பின்பு ஆசிரியர்கள் அவர்கள் பொட்டானிகல், கார்டன் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். அதற்குள் மதிய நேரமாகிவிட மீண்டும் மாணவர்கள் சாப்பிடச் சென்றனர். பாபிக்கு மறுபடியும் சோதனை உண்டாயிற்று. சாதத்தை சாம்பார் ரசத்துடன் பிசையக்கூட தெரியாமல் தவித்தான். சாப்பிடும்போது சாதம் அவன் மேலெல்லாம் சிந்தியது. வீட்டில் பாட்டி சாதம் பிசைந்து ஊட்டி விடுவாள். இங்கு யார் செய்வார்கள். மறுபடியும சக மாணவர்கள் என்னடா சாப்பிட முடியுமா? இல்லை உன்பாட்டியை இங்கே வரவழைக்க வேண்டுமா? என்று கிண்டல் செய்தனர். ஒருவழியாக சாப்பிட்டு முடித்ததும் கையைக் கழுவ முயற்சித்து சட்டையை பூராகவும் நனைத்துக்கொண்டான். மீண்டும் இரவில் பாபிக்கு புதிய இடத்தில் உறக்கம் பிடிக்க[illegible] அருகில் [illegible] தூக்கம் வரவில்லை. ஒருவழியாக தூங்கி எழுந்து பல் துலக்கி நீராடியபின் ஏனைய மாணவர்களுடன் காலை ஆகாரத்திற்குச் சென்றான். அன்று முதல்நாள் போல் பாபி அவ்வளவு கஷ்டப்படவில்லை. ஒரு நாளில் பாட்டியின் துணையின்றி சாப்பிட்டது கொஞ்சம் பழக்கமாகிவிட்டது போல் அவனுக்குத் தோன்றியது. பின்பு ஏனையவர்களுடன் சேர்ந்து நீர்வீழ்ச்சியை வேடிக்கை பார்க்கச் சென்றான். மிகவேகத்துடன் உச்சியிலிருந்து பள்ளத்தில் விழுந்துகொண்டிருந்த நீர்வீழ்ச்சி சோ என்ற இரைச்சலுடன் மனதிற்கு மிகவும் கிளர்ச்சியூட்டுவளதாக இருந்தது. அத்தகைய அற்புதமான இயற்கை எழில் கொஞ்சும் சூழ்நிலை சிறுவர்களை ஒரு கற்பனை உலகிற்கே ஈட்டிச் சென்றது. பாபி போன்றவனுக்கு அந்த அனுபவம் கிளர்ச்சியூட்டுவதாக இருந்தது. முதன் முறையாக தன் வீட்டை மறந்து பாட்டியை மறந்து தன்னையே மறந்து அந்த சுகஅனுபவத்தை ரசித்தான்.




நேரம் சென்றதே தெரியாமல் சிறுவர்கள் பொழுதுபோக்கியபின் எல்லோரும் விடுதிக்குத் திரும்பினர். வரும் வழியில் பாதையில் எல்லாம் மரங்களில் தாவிக்குதித்துக்கொண்டிருந்த குரங்குகளைப்பார்த்து சிறுவர்கள் மிகவும் ரசித்து மகிழ்ந்தனர்.

பின்பு அவர்களை ஆசிரியர்கள் மலைக் குகைகளுக்குள் அழைத்துச் சென்றனர். குகைக்குள் நுழைந்த சிறுவர்கள் ஆச்சரியம், பயம், பரபரப்பு, மகிழ்ச்சி ஆகிய உணர்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக சூழ்ந்து கொண்டு திக்குமுக்காடச் செய்தன. நகரவாழ்வு, பாடசாலை, அன்றாடப் பாடம் என்பதைத் தவிர வேறொன்றும் அனுபவித்தறியாத அந்தச் சிறுவர்களுக்கு அன்றைய அனுபவம் மறக்கமுடியாததாக அமைந்தது. அன்று மாலையே மாணவர்கள் ஊர்திரும்பி அவரவர் வீடுகளை அடைந்தனர்.

பாபி வீட்டுக்குள் நுழைந்தவுடன் பாட்டி அவனை ஆரத்தழுவிக் கொண்டாள். பின்னர் அவன் பயணத்தைப் பற்றியும் அனுபவங்களைப் பற்றியும் ஏராளமாக கேள்விகள் கேட்டாள். அதற்கு பாபி பாட்டி எனக்குப் பசிக்கிறது. ஏதாவது சாப்பிடத் தா!பின்பு சொல்கிறேன்! என்றான். உடனே வழக்கப்படி பாட்டி ஒரு கிண்ணத்தில் ரசம்சாதம் பிசைந்து கொண்டு வந்து அவனுக்கு ஊட்டிவிட முயன்றாள். உடனே பாட்டியைத் தடுத்த பாபி, போதும் பாட்டி இத்தனை நாட்கள் ஊட்டிவிட்டது போதும். இனி நானே சாப்பிடுகிறேன் என்று சொல்லிவிட்டு தானே சாப்பிட ஆரம்பித்தான். வழக்கத்துக்கு மாறான அவன் செய்கை பாட்டியை ஆச்சரியப்படச் செய்தது. அன்றிரவு பாபி தன் படுக்கையை தானே விரித்துக்கொண்ட போது பாட்டியின் ஆச்சரியம் இரு மடங்காகியது. தன் பயண அனுபவங்களை பாட்டியிடம் பகிர்ந்துகொண்ட பின் அதிசயத்திலும் அதிசயமாக பாபி தனியாகத் தூங்கினான்.

காலையில் பாபி தன் பற்களை தானே சுத்தம் செய்து கொண்டான். பின்பு பாட்டி அவனை குளிப்பாட்ட அழைத்த போது விடு பாட்டி! நான் தனியாகக் குளிக்கிறேன் என்று சொல்லிவிட்டான். காலை ஆகாரத்தை ஊட்ட முன்வந்த பாட்டியை தடுத்துவிட்டு தானே அதைச்சாப்பிட்டான். பின்பு பாட்டியை தன்னுடன் வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு தனியாகவே பாடசாலைக்குச் சென்றான். பாடசாலையிலிருந்து அவனை வீட்டுக்கு அழைத்துப்போக பாட்டி வந்தவுடன் பாட்டி! இனி நான் தனியாகவே வீட்டுக்கு வருவேன். நீ வரவேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

பாபியின் இந்த அதிசயமான



மாறுதல் பாட்டியை திகைக்க வைத்தன. ஒருமாதம் கழித்து பாபியின் வகுப்பு ஆசிரியை பாட்டியிடம் உங்கள் பேரனைப் பற்றிய கவலையை விடுங்கள். சுற்றுலா அனுபவம் அவனை முற்றிலும் மாற்றிவிட்டது. அவன் தன் சொந்தக் கால்களில் நிற்கப்பழகிக் கொண்டுவிட்டான். படிப்பில்கூட இப்போது நல்ல முன்னேற்றம் தெரிகிறது என்றாள். அதைக்கேட்டு பாட்டியடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித புதைகுழி தொடர்பில் விசேட நீதிமன்றம் அமையுங்கள்

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பில் விசேட நீதிமன்றமொன்றை அமைத்து அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாத்தளை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் கட்டட நிர்மாண வேலையின் போது தோண்டப்பட்ட குழிகளில் இருந்து மீட்கப்பட்ட 154 மனித் எச்சங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட நீதிமன்றமொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இச்சம்பவம் 1987- 1989 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இடம்பெற்றுள்ளதாகவும் அனைவரும் பல்வேறு வகையான சித்திரவதைகளுக்கு உட்படுத்திய பின்னரே கொல்லப்பட்டுள்ளதாகவும் சட்ட வைத்திய பரிசோதனை அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டதாக தெரிய வருகின்றது.

அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனமாகவிருந்து இதனை மூடி மறைக்க முற்படக் கூடாது. அக்கால கட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்திடமும் மாத்தளை பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்த இராணுவ பொலிஸ் மற்றும் வேறு சிவில் அதிகாரிகளிடமும் விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் ஜே.வி.பி. மேலதிக தகவல்களை திரட்டும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# காணிச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்- மஹிந்த

(கொழும்பு)

நாட்டில்தற்போது அமுலில்உள்ள காணிச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி அமைச்சின் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கில் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக பொதுமக்கள் காணிகள் பயன்படுத்தப்படும் போது உடனடியாக அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச காணிகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரச காணிகளை அபகரிப்போர் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதியற்ற முறையில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காணிப் பிரச்சினை குறித்து ஊடகங்களில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஜனாதிபதி இதன் போது அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைவு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரம் பாரியவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி தற்போது 135 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமை நீடித்தால் சந்தைக்குச் செல்லும் போது முச்சக்கர வண்டியில் பணத்தை நிரப்பிக் கொண்டு சென்று ஒரு சொப்பின் பையில் பொருட்களை வாங்கி வர நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை நீடித்தால் ஒரு இறாத்தல் பாணை வாங்க முச்சக்கர வண்டியில் பணத்தை நிரப்பிச் செல்ல நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நத்தைகளை கடத்த முயன்றவர் கைது

அரிய வகை கடல் நத்தைகளை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முயற்சித்த சீன பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய சுங்க விலங்குகள் பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினமிரவு மேற்கொண்ட சோதனையினையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சீன பிரஜையிடம் இருந்து 9 கடல் நத்தைகள் மீட்கப்பட்டுள்ளன. கைதான சீன பிரஜை இலங்கையில் நிரந்தர வசிப்பிட விசா பெற்றவர் என சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (அ-2)

# வீதிகளில் தரித்து நிற்கும் கட்டாக்காலி மாடுகள்

(முல்லைதீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறுபட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் அதாவது புதுகுடியிருப்பு நகரம், சிவநகர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், பொதுச்சந்தை,பாடசாலை,இந்து ஆலயங்கள், அரச, தனியார் அலுவலகங்களுக்கு முன்னால் கட்டாக்காலி மாடுகள் இரவு, பகலாக வீதிகளில் படுத்திருப்பதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு வீதிகளில் படுத்திருக்கும் கட்டாக்காலி மாடுகளால் பயணம் செய்வோர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் உள்ளது.

பொதுச் சந்தைக்குள் புகுந்து மரக்கறிகளை நாசம் செய்கின்றன. அத்துடன் வீதி அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இரவுவேளைகளில் அதில் தூங்குவதால் வீதிகள் கிளறுண்டு காணப்படுகின்றன.


இவ்விடயம் தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-267)

# மாகாண மட்ட அரை மரதன் ஓட்டம்

வடமாகாண கல்வி திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கி டையிலான வருடாந்த மாகாண மட்ட விளையாட்டு போட்டியின் ஓர் அங்கமாகிய அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு பரந்தன் சந்தியில் இருந்து விசுவமடு வரை நடைபெ றவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

போட்டியில் பங்கு கொள்கின்ற பாடசாலைகளின் அதிபர்கள் இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து 21 கி.மீ. தூரத்தைக் கொண்ட இவ் அரை மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு கொள்கின்ற வீர, வீராங்கனைகளை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்திய பின் போட்டி நடைபெறுகின்ற தினத்தன்று போட்டியில் பங்குபற்றுவதற்குரிய ஒழுங்கமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)




★ *1865*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றினர்.

★ **1917-வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த விளாடிமிர் லெனின் ரஷ்யா திரும்பினார்.**

★ *1922*-ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதற் பொதுச் செயலாளரானார்.

★ *1933*-நாசி ஜேர்மனியில் யூதர்களின் வணிக நிறுவனங்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கை வெற்றி பெறவில்லை.

★ *1942*-இரண்டாம் உலகப் போர்: பட்டான் தீபகற்பகத்தில் ஜப்பானியப் படையினர் அமெரிக்க மற்றும் பிலிப்பைன்ஸ் படையினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ *1948*-தென்கொரியாவில் ஜேயு என்ற இடத்தில் மனித உரிமை மீறல் மற்றும் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

★ *1958*-பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் ஹவானா மீது தாக்குதல் தொடுத்தது.

★ *1966*- சோவியத்தின் லூனா 10 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண் பொருளைச் சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ *1973*-உலகின் முதலாவது நகர்பேசி அழைப்பு நியூயோர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ *1975*-பொபி ஃபிஷர் அனதோலி கார்ப்பொவ்வுடன் சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற மறுத்ததால் கார்ப்பொவ் உலக வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

★ *1982*-போக்லாந்து தீவுகளை ஆர்ஜெண்டீனாவிடம் இருந்து மீளப் பெறும் முகமாக பிரித்தானியா தனது கடற்படையை அங்கு அனுப்பியது.

★ *1996*-ஐக்கிய அமெரிக்காவின் வான் படை விமானம் ஒன்று குரோவாசியாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அமெரிக்க அரசின் வணிக செயலாளர் ரொன் பிரௌன் உட்பட 35 பேர் உயிரிழந்தனர்.

★ *1997*-அல்ஜீரியாவில் தலித் என்ற கிராமத்தில் 52 பொதுமக்கள் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★ *1934*-டேம் ஜேன் குட்டால், சிம்பன்சியைப் பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்

★ *1955*-ஹரிஹரன், இந்தியப் பாடகர்


★ *1973*-பிரபுதேவா, இந்திய நடன அமைப்பாளர்

**இறப்புக்கள்**

★ *1680*-சிவாஜி, மராட்டியப் பேரரசர் (பி.1630)

★ *1932*-வில்ஹெம் ஒஸ்ட்வால்ட், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி.1853)

### விளாடிமிர் லெனின்



விளாடிமிர் இலீச் லெனின் 1870 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். இவர் ஒரு ரஷ்யப் புரட்சியாளரும் போல் செவிக் கட்சியின் தலைவரும், சோவியத் ஒன்றியத்தின் முதல் ஜனாதிபதியும், பின்னாளில் ஜோசவ்ப் ஸ்டாலினால் மார்க்சிசம்- லெனினிசம் என்று விரிவுபடுத்தப்பட்ட லெனினிசம் என்ற கோட்பாட்டின் நிறுவனரும் ஆவார். லெனின் என்பது ரஷ்யப் புரட்சிக்காக அவர் கொண்டிருந்த புனை பெயர்களில் ஒன்று பின்னாளில் தன்னுடைய உண்மையான விளா டிமீர் உலியனொவ் என்கிற பெயரை விளாடிமிர் லெனின் என்று மாற்றிக்கொ ண்டார்.

இவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தனது 54 ஆவது வயதில் உயிர் துறந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராபத்தினுள்... இலங்கை!

விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையை மையப்படுத்திய நிழல் யுத்தம் ஒன்று இடம்பெற்று வருகிறது. இலங்கையின் புவிசார் கேந்திர அமைவிடம் தான், இந்த நிழல் யுத்தத்தின் அடிப்படைக் காரணம். இந்த நிழல் யுத்தத்தில் பங்கெடுக்கும் தரப்புகள், ஒன்றிரண்டு நாடுகள் அல்ல, அமெரிக்கா, இந்தியா, சீனா, ஈரான். பாகிஸ்தான் என்று உலகின் முக்கியமான சக்திகளின் கவனம் இப்பொழுது இலங்கையின் மீது திரும்பியுள்ளது.

சர்வதேச கடல்வழிப் பாதையை அண்டியுள்ள இலங்கையின் அமைவிடம், பல்வேறு நாடுகளும் இலங்கையின்மீது குறிவைத்துச் செயற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. பல்வேறு நாடுகளும் இலங்கையை தமது பாதுகாப்பு நலனுக்கேற்ற வகையில் பயன்படுத்திக்கொள்ள முற்படுவதும், இலங்கை தனக்குள்ள நெருக்கடியில் இருந்து தப்பிக்க சில நாடுகளுக்கு அதிக இடைவெளியைக் கொடுப்பதுவும் இந்தப் பிராந்தியத்தை நிழல் யுத்தத்துக்கான களமாக்கி விட்டுள்ளது. இந்த நிழல் யுத்தத்தில் சீனா ஏற்கனவே அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளது தெரிந்ததே.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதத்தில், இலங்கையில் சீனாவின் செல்வாக்கு திடீரென அதிகரித்தது. அம்பாந் தோட்டையில் துறைமுகத்தை அமைப்பதல், வர்த்தக நலன்கள் கிடையாது என்று, பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தியா தட்டிக்கழிக்க, அதனை சீனா கவ்விப்பிடித்துக் கொண்டு வேகமாக உள்ளே நுழைந்தது. அதன் தொடர்ச்சியாக, மத்தல விமான



நிலையம், அனல்மின்னிலையம், துறைமுகங்கள், அரங்கங்கள், நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள் என்று சீனாவின் கையில் ஏகப்பட்ட திட்டங்கள் போயின. இதன் மூலம் இப்பொழுது இலங்கைக்கு உதவும் (கடன் மற்றும் கொடை) நாடுகளின் பட்டியலில் முதலிடத்துக்கு வந்தள்ளது சீனா.

அம்பாந்தோட்டையில் சீனா அமைத்துள்ள துறைமுகத்தை இந்தியா வெகுவாக அச்சத்துடன் பார்க்கிறது. இந்தத் துறைமுகம் மற்றும் மத்தல விமான நிலையத்திற்கான எரிபொருள் விநியோகத்தை சீனாவே மேற்கொள்ளவுள்ளது. இது, தனது பாதுகாப்புக்கு எதிராக, அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவினால் பயன்படுத்தப்படக் கூடும் என்ற இந்தியாவின் அச்சத்தை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

வரிகள், தீர்வைகள் இல்லாமல் 1.5 பில்லியன் ரூபா பெறுமதியான இந்தத் திட்டத்தை, சீனாவின் ஹன்குய் ஒப்பந்த மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு அளித்துள்ளது இலங்கை. அதுவும், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்த சூழலில் தான் இது இடம்பெற்றுள்ளது. இதனை இந்தியா ஒருபோதும் விரும்பாது.

திருகோணமலையில் பிரித்தானி யர் காலத்தில் அமைக்கப்பட்ட 102 எண்ணெய்க் குதங்களையும், 600 ஏக்கர் காணியையும் 2002 இல் இந்தியா பெற்றுக் கொண்டது. இவற்றை இந்தியாவின் அரசு நிறுவனமான இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனம் நிர்வகிக்கிறது. இதற்குப் போட்டியாகவே அம்பாந் தோட்டைத் துறைமுகம் விமான நிலையத்துக்கான எரிபொருள் விநியோகத்தில் கால் வைத்துள்ளது சீனா. அதுமட்டுமன்றி, ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர், திருகோணமலை எண்ணெய் குதங்களின் ஒரு பகுதியை இந்தியாவிடம் இருந்து மீளப் பெறப் படவுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருந்தார். அதனை அமைச்சர்கள் சுசில் பிறேம் ஜெயந்தவும், அனுர பிரியதர்சன யாப்பாவும் நிராகரித்துள்ளனர்.

எனினும் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிடம் இருப்பதை, இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்பது மட்டும் உண்மை. இவை கைமாற்றப்பட்ட, உடன்பாட்டை விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஒப்பானது என்று கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சுசில்பிறேம் ஜெயந்த, இலங்கையில் எண்ணெய் விநியோகத்தில் இந்தியா இறங்கியது இலாபத்தை நோக்கமாகக் கொண்டு அல்ல, என்றும் அடித்துக் கூறியுள்ளார்.

இலங்கையுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்காகவே எண்ணெய்க் குதங்களை கைப்பற்றியதாகவும் அவர் கூறியுள்ளது, இந்த அரசாங்கத்தின் மனோநிலையை படம் பிடித்துக் காட்டுகிறது. இப்போது, அதேவழியில் சீனாவுக்கும் எண்ணெய் விநியோகத்துக்கான களத்தை திறந்து விட்டுள்ளது இலங்கை.

இந்நிலையில், இலங்கை மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவைக் கண்காணிக்கவும், அதன் அச்சுறுத்தல்களை முறியடிக்கவும், இந்தியா விசாகப்பட்டினத்தில் உயர் திறன் கொண்ட நீர்மூழ்கி கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கவுள்ளது. சீனா உள்ளிட்ட எதிரி நாடுகளின் செய்மதிகளின் கண்ணுக்குப் புலப்படாத வகையிலும், வான் தாக்குதல் களிலிருந்து [illegible] வகை யிலும் நீ[illegible] குழி வசதிகளுடன் இந்தத் தளம் அமைக்கப்படவுள்ளது.

விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்கு கடற்படைத் தலைமையகத்தில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் இந்தத் தளம் **வர்ஷா திட்டம்** என்ற பெயரில் நிறைவேற்றப்படவுள்ளது. சீனாவின் ***ஹைனான் தீவின்*** தென்புறத்தில் **யலோங்கில்** அமைந்துள்ள தரைக்கு கீழான அணுசக்தி நீர்மூழ்கித் தளத்துக்கு பதிலடியாகவே இந்தியா இதைனை அமைக்கவுள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்கு தான், **சீனாவின் புதிய *சாங்* வகை அணுசக்தி தாக்குதல் நீர்மூழ்கிகள் உள்ளன.** ஆனால், இந்து சமுத்திரத்தில் சீனாவின் தலையீட்டைக் குறைப்பதற்கே விசாகப்பட்டினத்தில் புதிய தளம் அமைக்கப்படுகிறது என்று இந்தியா தெரிவித்துள்ளது. இந்தியாவின் இந்த முடிவுக்கு ஒரு காரணம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் செய்மதி மற்றும் விண்வெளித் துறையில் ஏற்பட்டுவரும் நெருக்கம் தான். செய்மதிகளை ஏவ இலங்கைக்கு உதவுவதாக கூறிக்கொண்டு, அவற்றைக் கொண்டு தனது நீர்மூழ்கிகளை சீனா உளவு பார்க்கலாம் என்று இந்தியா அச்சம் கொள்கிறது.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் பலமே, இலங்கைதான் என்று மாறிப் போயுள்ளது. **இந்நிலையில், விசாகப்பட்டினத்தில் இந்தியா அமைக்கவுள்ள பாரிய தளமும், அம்பாந் தோட்டையில் எரிபொருள் விநியோகம் சீனாவின் கைக்குச் சென்றுள்ளதும், இந்த நிழல் யுத்தத்தின் மையத்தை இலங்கையை நோக்கி இழுத்துவிட்டுள்ளன.**

இன்னொரு பக்கத்தில் பாகிஸ்தான், இலங்கையை வைத்து இந்தியாவுக்கு எதிராக காய்களை நகர்த்தி வருகிறது. இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராக முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் குவாசிம் குரேஷி நியமிக்கப்பட்டுள்ளதை இந்தியா விருப்புடன் பார்க்கவில்லை. இது ஒரு இராணுவ நலன்சார் நகர்வு என்றும் தனக்கு எதிரான நடவடிக்கை என்றும் தான் இந்தியா கருதுகிறது.

கடந்த மாதம் இவர் கொழும்பிலுள்ள தூதரகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார். இம்மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை தோற்கடிப்பதில் பாகிஸ்தானே அதிக கரிசனை காட்டியது. கடந்தமுறை சீனா நேரடியாக களமிறங்கி ஆதரவு திரட்டியது. இம்முறை சீனா அவ்வாறு ஈடுபடவில்லை. இம்முறை சீனாவின் இடத்தை பிடித்துக் கொண்டது பாகிஸ்தானே. பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரபானி கர் இதில் தனிப்படக் கவனம் செலுத்தியிருந்தார். அவரது உத்தரவின் பேரில் ஜெனிவாவில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் சமீர் அக்ரம், *இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பின்* பிரதிநிதிகளை மூன்றுமுறை அழைத்து இலங்கைக்கு சார்பாக நடந்துகொள்ளும்படி கேட்டிருந்தார்.அவரது பிரசாரத்தின் மூலம், குவைத் மொரிட்டானியா, கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. புர்கினோ பாசோ வாக்களிக்கவில்லை. இந்த அமைப்பிலுள்ள லிபியாவும், சியராலியோ மட்டுமே ஆதரித்து வாக்களித்தன.

> "இந்த நிழல் யுத்தத்தில் பங்கெடுக்கும் தரப்புகள், ஒன்றிரண்டு நாடுகள் அல்ல. அமெரிக்கா, இந்தியா, சீனா, ஈரான், பாகிஸ்தான் என்று உலகின் முக்கியமான சக்திகளின் கவனம் இப்பொழுது இலங்கையின் மீது திரும்பியுள்ளது."

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் ஏழு நாடுகளும் அமெரிக்காவின் பக்கம் சாய்ந்திருந்தால், இலங்கைக்கு ஆதரவாக 6வாக்குகள் தான் கிடைத்திருக்கும். இந்த உறவின் தொடர்ச்சியாக, அடுத்த சில நாட்களில் கொழும்பு வரவுள்ள பாகிஸ்தான் வெளிவிவகார செயலர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் போன்றோரைச் சந்தித்துப் பேசவுள்ளார். இவையெல்லாம் இந்தியாவுக்கு கடுப்பை ஏற்படுத்தும் விடயங்கள்.

பாகிஸ்தான் இவற்றையெல்லாம் செய்வதற்குக் காரணம் இலங்கை மீதான பரிவோ பாசமோ அல்ல. அது குறிவைத்துள்ளது இந்தியாவைத் தான். இலங்கையை வைத்து இந்தியாவை நெருக்கடிக்குள் தள்ளிவிடப் பார்க்கிறது பாகிஸ்தான்.

காஷ்மீரில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்துவதிலேயே பாகிஸ்தான் குறியாக உள்ளது.

ஆங்காங்கே காஷ்மீரில் நடக்கும் தாக்குதல்கள் பாகிஸ்தானின் கை அங்கு ஓங்குவதற்கான அறிகுறியாகவே தெரிகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா என்ன செய்யும் என்பதைக் கணித்தே அதற்கு முரணான வகையில் பாகிஸ்தான் செயற்பட்டது. இதையே காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிராகத் திருப்பிவிடும் திட்டம் பாகிஸ்தானிடம் உள்ளது.

ஏற்கனவே, 1994 இல் காஷ்மீர் மனித உரிமை மீறல்களை ஐ.நா. வுக்கு கொண்டுபோய் இந்தியாவை நெருக்கடிக்குள் தள்ளியிருந்தது பாகிஸ்தான். இந்த நிலையில், தமிழ்நாட்டில் தனிஈழத்துக்கு ஆதரவாகக் கிளம்பியுள்ள போராட்டம் இந்திய மத்திய அரசுக்கு கடுமையான நெருக்கடியைக் கொடுத்துள்ளது. மத்திய அமைச்சர் நாராயண சாமி தனி ஈழத்தை ஆதரிப்பது, காஷ்மீரில் பாகிஸ்தான் தனது வேலையைக் காட்டுவதற்கு வழி ஏற்படுத்தி விடும் என்று எச்சரித்துள்ளது இதையே காட்டுகிறது.

இவ்வாறாக பல்வேறு நாடுகளினதும் நிழல் யுத்தகளமாக இலங்கை மாறியுள்ளது.

இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் இந்த தீவிர நிழல் யுத்தத்தை தனக்குச் சாதகமான வகையில் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது அரசாங்கம். இது, இலங்கையை பேராபத்தில் தள்ளி விடக்கூடிய வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அள்ள அள்ளக் குறையாத அபூர்வ தனயோகம் யாருக்கு?

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை: பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு என்பது பெரியோர் வாக்கு. பொருள் என்பதற்கு தனம், பணம், நிதி, திரவியம், செல்வம், பொக்கிஷம், கஜானா என்ற பல பதங்கள் உள்ளன.

இவ்வுலகத்தில் இசைபட வாழ்ந்து காட்ட கட்டாயம் பணம் வேண்டும். அந்தப் பணத்தை ஒரு சிலருக்கு அவருடைய யோக ஜாதகம் அபரிமிதமாக வாரி வழங்குகிறது. இந்தப் பண மழை கொட்டும் யோகத்திற்கு அபரிமித தனயோகம் என்று பெயர். செல்வத்தை வழங்கும் வீடு பணபர வீடுகளாகும். லக்னத்திற்கு 2,5,11 ஆம் வீடுகளைத் தான் இவ்வாறு அழைப்பார்கள். தன ஸ்தான (2 ஆம் வீடு) சொல், வாக்கு, சோர்விலன், கவி, கற்பனை, அடக்கம், அழகிய முகப் பொலிவு, பணம், திரவியம், வருவாய், முடிபு எடுக்கும் திறன், வாக்குறுதி, உண்மை அல்லது பொய் பேசுதல், குடும்பம், சுவையான உணவு, விருந்து திட்டமிடல் அதனை நிறைவேற்றுதல், ஏற்பாடு செய்தல் , கட்டமைப்பை விருத்தி செய்தல், சேமிப்பு, பற்கள், வலது கண், கழுத்து, பொன், வெள்ளி , முத்து ஆபரணங்கள் முதலானவை இரண்டாம் வீட்டின் காரகங்கள். காரக பாவர் குரு பகவான்.

## ஜோதிடக் களம்

மூத்த சகோதர- சகோதரிகள், இலாபம், ஆதாயம், பெரிய அதிகார அந்தஸ்துள்ள பதவி, இலக்கியம், நுண்கலைகளில் அதீத பற்று, ஆளுமை, கொடை வள்ளல், தார்மீக சிந்தனை , மானம், மரியாதை, நற்பெயர், கொள்கைக் குன்று, எதிர்பாலாரின் தடையற்ற ஆதரவு, ஆடை, ஆபரணம், அணிகலன்கள், பெரும் புகழ், செல்வாக்கு, வெளிநாட்டுப் பயணம், திரண்ட அசையாச் சொத்து, அதன் அபிவிருத்தி, வாகன யோகம், சுகம், சர்வதேச அரங்குகளில் புகழ்,11 ஆம் வீட்டின் காரகங்கள் ஆகும். காரக பாவர் குரு பகவான்.

✷ ஜோதிட ரீதியாக இந்த இரண்டு இராசிகளும் சேமிப்பு வங்கியின் தலைமையகம் (குரு இராசியதிபதி) என்பதால் பொதுவாக தனுசு, மீன இராசி, லக்னங்களில் பிறந்தவர்களிடம் காசு, பணம் சாதாரணமாகப் புரளும்.

✷ விருச்சிக லக்னம், கும்ப லக்னம் இராசிகளில் பிறந்தவர்களுக்கு தனகாரகன் குருவின் வீடு தனஸ்தானம் என்பதால் பொதுவாகப் பணத்தட்டுப்பாடு இருக்காது. யார் காசோ, எவர் பணமோ சதாசர்வ நேரமும் கையில் தாராளமாகப் புழங்கிக் கொண்டே இருக்கும்.

✷ விருச்சிகம், கும்ப லக்னமாகி, குரு கேந்திர கோணங்களில் நின்றால் திரவியம் கைவசம் நிலைத்து நிற்கும். அதே குரு இலாப ஸ்தானத்தில் நின்றால் குன்றாச் செல்வம், நிரம்ப நிதி கைவசம் உண்டு.

✷ 2 ஆம் அதிபன், 11 ஆம் அதிபன் அதே வீடுகளில் நின்றால் தன லாபமுண்டு. 2 ஆம் அதிபன், 11 ஆம் அதிபன் பரிவர்த்தனை ஆனால், விபரீத தனயோகம். இந்த அமைப்புடன் லக்னாதிபதி, பாக்கியாதிபதி தொடர்பு பெற்றால் விபரீத தனயோகம் அட்டகாசமாக வேலைசெய்யும்.


✷ 9 ஆம் அதிபன், 11 ஆம் அதிபன் அதே வீடுகளில் நின்றாலும் பரிவர்த்தனை பெற்றாலும் தன இலாபமுண்டு.

✷ 2,5,9,11 ஆம் அதிபதிகள் ஆட்சி உச்சம் பெற்றாலும் பரிவர்த்தனை ஆனாலும் இந்த அமைப்பில் லக்னாதிபதி, 10 ஆம் அதிபன், குரு இந்த மூவரில் யாரேனும் ஒருவர் இணைந்தால் விபரீத தன யோகமுண்டு.

✷ எந்த லக்னமானாலும் கோணாதிபதிகள் இன்னொரு கோணத்தில் சங்கமமாகி அந்த அமைப்பை லக்னத்தின் தனாதிபதியோ (2 ஆம் அதிபன்) அல்லது லாபாதிபதியோ (11 ஆம் அதிபன்), பொதுவான தனகாரகன் குருவோ, சூரியனோ, 10 ஆம் அதிபதியோ பார்த்தாலும் இணைந்தாலும் அபரிமித தன யோகமாகும். லக்னாதிபதி 2,10,11 இல் நின்றால் இந்த அமைப்புக்கு மேலும் மெருகேற்றும். பரம்பரை செல்வத்தைக் கட்டிக் காப்பதுடன் தனது உத்தியோகம், தொழில் காரணமாகவும் திரண்ட திரவியம் வந்து சேரும். பரம்பரை பரம்பரைக்குப் போதுமான செல்வம் சேரும்.

### திடீர் தன யோகம்

அதிர்ஷ்ட இலாபம் குதிரைப் பந்தயம், சீட்



டாட்டம். பங்குச் சந்தை, விளையாட்டுகளில் யாருக்கு வெற்றி என்பது போன்ற சூதாட்டங்களில் திடீர் தன வரவு ஏற்படலாம். இந்த திடீர் தன யோகம் கிடைக்க லக்னத்திற்கு 5 ஆம் வீடு, 5 ஆம் அதிபன் பலமாக வேண்டும். 5 ஆம் வீட்டில் தீயவர்கள் நிற்கக் கூடாது. 5 ஆம் அதிபன் ஆட்சி, உச்சம் பெறலாம். 5 ஆம் வீட்டில் தீயவர்கள் நிற்கக் கூடாது. 5 ஆம் அதிபன் ஆட்சி, உச்சம் பெறலாம்.

அல்லது 5 இல் உச்ச கிரகம் நிற்கலாம். 5 இல் சுபர்கள் கூட்டணியாகவோ அல்லது 2,11 அதிபர்கள் இணைவோ அல்லது இந்த அதிபதிகள் 5 ஆம் வீட்டைப் பார்த்தாலும் இந்த அதிர்ஷ்டம் அமையலாம். பார்வையை விட சேர்க்கைதான் சிறந்த பலன்களைத் தரும். ஆட்சி , உச்சம் இல்லை என்றால் பலன்கள் ஏனோதானோ என்றுதான் இருக்கும். பொதுவாகவே ஆட்சி, உச்சம் (குறைந்த பட்சம் இரண்டு) அல்லது பரிவர்த்தனை யோகங்கள் பெறாத ஜாதகங்கள் மிகவும் சாதாரண ஜாதகம்தான்.

✷ 8 ஆம் வீடும் பணபர வீடுதான். அந்த வீட்டின் வழியாகக் கிடைக்கும் திடீர் தனயோகம் நல்ல வழியாக இருக்காது. அல்லது ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெறுவது போன்றிருக்கும். உதாரணத்திற்கு ஒரு கணவர் நல்ல தொகை இன்சூரன்ஸ் செய்திருக்கிறார். திடீரென்று அவர் விபத்தில் மரணமடைகிறார் என்றால் அதன் வழியாகக் கிடைக்கும் பெரும்தொகை கணவரின் இழப்பால் வருவதால் அதை ஒரு யோகமாக எடுத்துக் கொள்ள முடியாது. அந்தக் காலத்தில் பிள்ளைகுட்டி இல்லாதவர்கள் யாருக்காவது உயில் எழுதி விட்டு மரணமடைந்திருக்கிறார்கள். தற்காலம் அதெல்லாம் செல்லுபடியாகாது. நம்மிடம் இருக்கிற சொத்தை எவனாவது மாற்றி எழுதாமல் இருந்தாலே யோகம் தான் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

✷ 5 ஆம் வீட்டில் சந்திரனுடன் இராகு இணைந்தால் திடீர் தன யோகம் ஏற்படலாம். இந்த அமைப்பை குரு பார்த்தாலும் சேர்ந்தாலும் யோகம் பலமாகும்.

✷ லக்னாதிபதி (1), தனாதிபதி (2), லாபாதிபதி (11) மூவரும் 1,2,11 ஆம் வீடுகளில் நின்றாலும் பரிவர்த்தனை பெற்றாலும் தனயோகம். இந்தக் கிரக அமைப்பை செவ்வாய் (பூமி காரகன்), குரு (தனகாரகன்), சுக்கிரன் (வாகன காரகன்), சந்திரன் (4 ஆம் பாவகாரகன்) யாரேனும் ஒருவர் பார்த்தாலும் சேர்ந்தாலும் தனயோகத்துடன் திரண்ட சொத்தும் கட்டாயம் களைகட்டும்.

# அரசாங்கத்தின் அதீத தலையீட்டால் அபிவிருத்தி என்பது அடிமட்டத்தில்

## கரைச்சி தவிசாளர் குமுறல்

கரைச்சி பிரதேச சபைக்குள் அரசாங்கத்தின் அதீத தலையீடு காரணமாக அங்கு அபிவிருத்தி என்பது அடிமட்டத்திலேயே காணப்படுவதாக கரைச்சி பிரதேசசபையின் தலைவர் நா.வை. குகராஜா தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியிலுள்ள 34 பிரதேச சபைகளுடன் ஒப்பிடும் போது இப்பகுதியிலுள்ள மக்கள் தமது வாழ்வி யலினை அபிவிருத்தி செய்ய முடியாத அவல நிலையிலுள்ளனர்.

இங்குள்ள 58 கிராம சேவகர் பிரிவுகளில் 336 கிராமங்கள் உள்ளன. இவையனைத்தும் வறுமையிலேயே வாடுகின்றன.

இங்குள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டம் ஒன்று அரசினால் வழங்கப்பட்டது. அவ்வீட்டுத் திட்டத்திற்கு 7 இலட்சம் ரூபா தேவையாகும். எனினும் அரசு 3 இலட்சம் ரூபாவே வழங்கியுள்ளது.

மிகுதி 4 இலட்சம் ரூபாவினை பெறுவதற்கு அம்மக்கள் தமது காணியினை அடகு வைத்து காணியினையும் வீட்டினையும் பறிகொடுக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆயிரத்து 796 வீதிகள் பிரதேசசபைக்குட்பட்டுள்ளன.

இவையனைத்தும் பிரதேசசபையின் அனுமதி பெற்றுத்தான் புனரமைப்போ மீள் நிர்மாணமோ செய்யப்படல்வேண்டும்.

ஆனால், பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் இவ்வீதிகள் தரமற்ற முறையில் அமைக்கப்படுகின்றன. இவைதவிர எமது பிரதேசசபையில் தற்போது 42 ஆளணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சபையில் இருந்த செயலாளர், முதன்மை லிகிதர், முதன்மை மேலாளர், நிதிப்பிரிவு அதிகாரிகள், திட்டமிடல் உத்தியோகத்தர்கள் என அனைத்து முக்கிய பதவிகளில் உள்ளவர்களும் இடமாற்றப்பட்டு சபையினை இயங்கவிடாது முடக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை வேதனை தருகின்றது.

கரைச்சி சந்தையில் உள்ள கடைகள் பிரதேசசபையின் அனுமதியின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

பழையவர்களைக் களைந்து புதியவர்களை இணைத்துக் கொண்டு தமிழர்களின் உரிமையினை, தமிழ் உணர்வினை தட்டிக் கழிக்க சிலர் முனைகின்றனர் எனவும் அவர் குற்றம்சாட்டினார். (அ-4)

# விதை நெல்லுக்கு தட்டுப்பாடு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் காலபோக வேளாண்மைக்கான விதை நெல்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக் கூடுமென விவசாயிகள் எதிர்வுகூறுகின்றனர்.

அண்மையில் பெய்த பருவகால மழையினையடுத்து 50 வீதமான நெல் வயல்கள் முற்றாக அழிந்த நிலையில் காணப்பட்டன. எஞ்சியதில் வெட்டி எடுக்கப்பட்ட நெல் முழுவதும் முளை வந்து விதைப்பிற்கு ஒவ்வாத நிலையில் இருப்பதாக அவர்களால் வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது. இதுபோன்ற விதை நெல் தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-84)

# ஈழப்போரில் வெளிநாடுகளின் அதீத தலையீடு இருந்துள்ளது

## திருமாவளவன் தெரிவிப்பு

(சென்னை)

வைகோவோ பழ.நெடுமாறனோ முதல் அமைச்சராக இருந்தால் கூட ஈழத்தில் நடைபெற்ற போரை தடுத்திருக்க முடியாது என தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் இன்றைய கால கட்டத்தில் ஈழத்தமிழர் பிரச்சினை என்ற தலைப்பில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றுகையில்,

தி.மு.க. தலைவர் கலைஞர் நினைத்தால் போரை தடுத்திருக்கலாம் என்று கூறுகிறார்கள். ஆனால், ஈழப் போரில் வெளிநாடுகளின் பங்களிப்பும் இருந்தது என்பதை அறிந்தவர்கள் கலைஞர் அல்ல வைகோவோ, பழ . நெடுமாறனோ முதலமைச்சராக இருந்தால் கூட போரை தடுத்திருக்க முடியாது என்பதை அறிவார்கள்.

சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றுத்தான் ஈழத் தமிழ் பிரச்சினையை கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இது ஒரு சர்வதேச பிரச்சினையாக கொண்டு வருவதற்கு இலட்சக்கணக்கான உயிர்களை இழந்திருக்கிறோம். தனி ஈழத்திற்காக போராடுவோம். ஈழம் வெல்லும் அதை காலம் சொல்லும் இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளப்பற்றாக்குறைகளுடன் அரசரத்தினம் வித்தியாலயம்

(முல்லைத்தீவு)

மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம் பல குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின் இயங்கிவரும் இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 182 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை தரம் 1 தொடக்கம் 9 வரை ஆங்கில பாடத்திற்கு ஆசிரியர் இன்மையால் ஆங்கில அறிவு பின்னடைவில் உள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை விஞ்ஞானம், கணிதம், சித்திரம், சங்கீதம், சுகாதாரமும் உடற்கல்வியும், இரண்டாம்மொழி சிங்களம் ஆகிய பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பரீட்சைக்கு தம்மை ஆயத்தம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக்கின்றனர்.

இங்கு 9 வகுப்பறை தேவையான நிலையில் 5 வகுப்பறையே உள்ளது. நான்கு வகுப்பறைகளும் மரத்திற்குக் கீழேயே இயங்கி வருகின்றன.

சங்கீதம், சித்திரம், சுகாதாரம் ஆகிய பாடங்களுக்கு செயற்பாட்டு அறை வசதியில்லை. போதியளவு அலுவலக தளபாட வசதியும் மாணவர்களின் கற்றல் தளபாட வசதியும் போதியளவு இல்லை.

விஞ்ஞான ஆய்வுகூடம், உதவி ஆசிரியர் என்பன இல்லை.மின்சாரவசதி, கணனி வசதி, சமையல் அறை, உணவுக்களஞ்சிய அறை வசதி என்பன இல்லை.

சுற்றுமதில் இன்மையால் கட்டாக்காலிகள் பாடசாலையை அசுத்தம் செய்கின்றன.ஆசிரியர், மாணவர்களுக்கான மலசலகூட வசதி இல்லை.

வெளிமாவட்டங்களில் இருந்து 4 ஆசிரியர்கள் கற்பிக்க வருகை தருகின்றபோது தங்குமிட வசதியில்லை, நூலகவசதி, நூலக ஆசிரியர், நூல் வசதி என்பன இல்லை.

பாடசாலைப் பெயர்ப்பலகையானது மூன்று மொழியிலும் எழுதப்படவில்லை. பாடசாலை மைதானம் குன்றும் குழியுமாக உள்ளது. விளையாட்டு உபகரணம் இல்லை, உடற்பயிற்சி வசதியில்லை, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் இல்லை.

அதிபருக்குரிய நிரந்தர அலுவலகம் இல்லை, ஆசிரியர் ஓய்வு அறை இல்லை, மாணவர்களுக்கான பேருந்து வசதியில்லை.

4 கிலோமீற்றர் தூரத்திலிருந்து இப்பாடசாலைக்கு நடந்தே மாணவர்கள் வருகின்றனர். இவர்களுக்கான துவிச்சக்கரவசதியில்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவ முன்வரவேண்டும் என மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## போக்குவரத்து சேவை ஆரம்பம்

(பூநகரி)


பூநகரியில் இருந்து கிளிநொச்சி செல்லும் மக்களின் நலன்கருதி பூநகரிக்கும் கிளிநொச்சிக்கும் பரந்தன் ஊடாக புதிய பேருந்து சேவையொன்று தனியார் போக்குவரத்துப் பிரிவினரால் சென்றவாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 10 மணிக்கு பூநகரி வாடியடியில் இருந்து புறப்படும் இப் பேருந்து மீண்டும் பி.ப 1.30 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து பூநகரிக்கு புறப்படும் என தனியார் போக்குவரத்துச் சேவை நேரக் கண்காணிப்பாளர் தெரிவிக்கிறார். (அ-84)

## மாந்தை கிழக்கின் பகுதிகளுக்கு அரச பேருந்து சேவை இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைதீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளுக்கு அரச பேருந்து சேவை இன்மையால் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர். போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 2 ஆயிரத்து 656 குடும்பங்கள் மேற்குறித்த பிரதேசத்தில் வாழ்ந்து வரும் நிலையில் அரச பேருந்து வசதி இன்மையால் பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர் மற்றும் பயணிகள் பயணம் செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இப்பிரதேசத்திற்கு வீட்டுத் திட்டம், மின்சாரம், பாதை அபிவிருத்தி எதுவுமே இல்லை.

23 வருடங்களின் பின்னர் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிற்கு கடந்த மாதம் 18ஆம் திகதி அரச பேருந்து ஒன்று வழங்கப்பட்டது. அதுபோன்று மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கும் அரச பேருந்து ஒன்றை ஒழுங்கு செய்து தரும்படி இலங்கை போக்குவரத்துச் சபையினரிடம் மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-267)



வடமாகாணத்தில் எரிவாயு மூலம் உடலைத் தகனம் செய்யும் முதலாவது மயானம் நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டத்தில் ஆரம்பித்து வைத்த போது.... (படங்கள்: பூந்தோட்டச் செய்தியாளர்)

# தமிழரசுக் கட்சிக்கு அடிபணியமாட்டேன்

## எதிர்க்கட்சி உறுப்பினர் றெமிடியஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கத்தினால் முன்மொழியப்பட்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சம்மதத்துடன் யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய நான் தமிழரசுக் கட்சிக்கு அடிபணிய முடியாதுஎன யாழ். மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் முடியப்பு றெமிடியஸ் தெரிவித்தார்.

குறித்த உறுப்பினருக்கு எதிராக அக்கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் என்ற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு தீர்மானத்தையோ அல்லது முடிபுகளையோ நான் மீறியதில்லை.அது போல தமிழீழ விடுதலை இயக்கத்தின் முடிபுகளுக்கு எதிராக நான் செயற்பட்டதுமி ல்லை. எனக்கு வாக்களித்த மக்களின் நலன்களினை கருத்தில் கொண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடையும் பொருட்டு என்னை அர்ப்பணித்து செயற்பட்டு வந்துள்ளேன் என அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு பல விளக்கங்களினையும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களோடு ஒருவனாக நின்று அவர்களுக்காக என்னை அர்ப்பணித்து செயற்படுவேன் என அதிலுள்ளது. (அ-4)

# முல்லை. மாவட்ட வெள்ள அனர்த்த பாதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் இவ்வாண்டு ஜனவரி மாதம் வரை 5 தடவைகள் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது ஆயிரத்து 457 குடும்பங்களைச் சேர்ந்த 52ஆயிரத்து653 உறுப்பினர்களும் 2 ஆயிரத்து 311.5 ஏக்கர் வேறு பயிர்ச் செய்கை நிலங்களும் 4 ஆயிரத்து 149 மந்தைகளும் 262.2 கிலோமீற்றர் வீதிகளும் ஆயிரத்து 50 வீடுகள் முழுமையாகவும் 8 ஆயிரத்து 138 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எச்.டீ. காமினி பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 546 குடும்பங்களை சேர்ந்த 14 ஆயிரத்து 831 உறுப்பினர்களும் 123 வீடுகள் முழுமையாகவும் 737 வீடுகள் பகுதியாகவும் ஆயிரத்து 957.5 வேறு பயிர்ச் செய்கை ஏக்கரும் 25.5 கிலோமீற்றர் வீதிகளும் அழிவடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 336 குடும்பங்களை சேர்ந்த 18 ஆயிரத்து 39 உறுப்பினர்களும் 556 வீடுகள் முழுமையாகவும் 4 ஆயிரத்து 657 வீடுகள் பகுதியாகவும் 2 ஆயிரத்து 501 வேறு பயிர் ஏக்கர் நிலமும் மந்தை வளர்ப்பில் கோழி 3 ஆயிரத்து 115, ஆடு 45, மாடு 252, 24.9 கிலோமீற்றர் வீதியும் சேதமடைந்துள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து எட்டு உறுப்பினர்களும் 87 வீடுகள் முழுமையாகவும் 2ஆயிரத்து 123 வீடுகள் பகுதியாகவும் ஆயிரத்து 198.5 வேறு பயிர் ஏக்கர் நிலமும் மந்தை வளர்ப்பில் கோழி 151, மாடு 10, 137.5 கிலோமீற்றர் வீதியும் அழிவடைந்துள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 355 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 517 உறுப்பினர்களும் 5 வீடுகள் முழுமையாகவும் 89 வீடுகள் பகுதியாகவும் 960 வேறு பயிர் ஏக்கர் நிலமும் 38.6 கிலோமீற்றர் வீதியும் அழிவடைந்துள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 138 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 762 உறுப்பினர்களும் 279 வீடுகள் முழுமையாகவும் 508 வீடுகள் பகுதியாகவும் ஆயிரத்து 229 வேறு ஏக்கர் நிலமும் மந்தை வளர்ப்பில் கோழி 535, ஆடு 29, மாடு 12, 35.7 கிலோமீற்றர் வீதியும் அழிவடைந்துள்ளன.

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 161 குடும்பங்களைச் சேர்ந்த 496 உறுப்பினர்களும் 24 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. (அ-3-267)

## நுளம்பு வலைகள் கிடைக்கவில்லை

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நுளம்புகளின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் டெங்கு போன்ற நோய் பரவும் அபாயம் உள்ளது.

இந் நுளம்பிலிருந்து மக்களை பாதுகாக்க மலேரியா தடுப்பு இயக்கத்தினரும் சில அரச சார்பற்ற நிறுவனத்தினரும் மக்களுக்கு பாதுகாப்பாக நுளம்பு வலைகளை வழங்கி வருகின்றனர். ஆனால் நுளம்புகளை அழிப்பதற்கும், தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து அபாயநிலை காணக்கூடிய பல கிராமங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்ட போதும் ஏனைய கிராமங்களுக்கு நுளம்பு வலை வழங்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து நுளம்பு வலைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் எழுச்சி! அடக்கும் ஜெ.ஆட்சி!

பொலிஸ் மூலம் எத்தனை அடக்கு முறைகளை ஏவியபோதும் கல்லூரி நிர்வாகங்கள் மூலம் மிரட்டல் கெடுபிடிகளைக் காட்டியபோதும் மாணவ சமூகத்தின் எழுச்சிமயமான போராட்டத்தை கொஞ்சமும் அடக்கமுடியவில்லை. அதனால் ரொம்பவே திணறிக்கொண்டிருக்கிறது ஜெ. அரசு.

இலங்கை அரசின் மீதான கோபம் தற்போது இந்தியத்தின் பக்கமும் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் மாணவர்களின் போராட்டம் நிமிடத்திற்கு நிமிடம் விஸ்வரூபம் எடுத்தபடியே இருக்கிறது. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு; எதைக்கண்டும் நாங்கள் அஞ்சோம்; அடங்கோம்! என்றபடி தமிழகத்தின் ஒட்டுமொத்த மாணவ சமூகமும் ஒரே நேரத்தில் வெடித்தெழுந்திருப்பதால் தமிழகமே நெருப்புக்கடலில் மிதக்கிறது.



சென்னையில் கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை ஒட்டுமொத்த மாணவர்களும் மெரினாவில் கூடப்போகிறார்கள் என்ற தகவல் வந்ததும் பொலிஸார் கடற்கரை வீதியெங்கும் குவிக்கப்பட்டார்கள். கடற்கரை நோக்கிச் செல்லும் ஒவ்வொரு சந்து பொந்துகளிலும் தன் பலத்தைக்காட்டி மிரட்டும் தோரணையில் நின்றது பொலிஸ். ஆனால், மாணவர்கள் சேனை அச்சத்தைத் துச்சமென தூக்கி எறிந்துவிட்டு கடற்கரை நோக்கி அணிவகுக்கத் தொடங்கியது. மாநிலக் கல்லூரி, லயோலா கல்லூரி, நந்தனம் அரசு கலைக்கல்லூரி, தியாகராஜா கல்லூரி, வேல்ஸ் கல்லூரி என சகல மாணவர்களும் வீறுகொண்டு அணிவகுக்க, அவர்களோடு சென்னை சட்டக்கல்லூரி மாணவர்களும் கைகோர்க்க, மெரினா பகுதியே போராட்டப் பிராந்தியமாக மாறியது.

காமராஜர் வீதிக்கு வராமல் மாணவர்கள் கடலை ஒட்டிய வீதியிலேயே இருக்கும் படி தடுப்புக்களை பொலிஸார் அமைத்திருந்தனர். அங்கிருந்தபடியே இந்திய அரசே, தமிழர்களின் முதுகில் குத்தாதே! இது இந்திய அரசா? இல்லை காங்கிரஸ் அரசா? என்றெல்லாம் பிராந்தியம் அதிரக் கோசங்களை எழுப்பினர் மாணவர்கள். கடலின் அலைகளை பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த மாணவர்களின் தலைகள் மறைந்தன. 12 மணியளவில் மாநிலக் கல்லூரி மாணவர்கள் குபீரென தடுப்பைத் தள்ளிவிட்டு வீதிநோக்கி ஆவேசமாய்க்கிளம்ப அவர்களை மாணவசேனை பின் தொடர்ந்தது. அவர்களைத் தடுக்க முயன்ற பொலிஸார் தடுக்க முடியாமல் திணறினர். வீதியில் ஆவேசமாக புறப்பட்ட மாணவர்கள் டி.ஜி.பி. அலுவலகத்தை முற்றுகையிடும் திட்டத்தோடு முன்னேற பொலிஸார்களோ டி.ஜி.பி. அலுவலகத்தைச் சுற்றி பொலிஸ்வேலியை அமைத்து நின்றன. பதறிப்போய் ஓடிவந்த உயரதிகாரிகள் மாணவர்களைப் படாத பாடுபட்டு சமாதானப்படுத்தி உழைப்பாளர் சிலைப்பக்கம் கொண்டுவந்தனர்.

அப்போது பழ.நெடுமாறனும் எம்.நடராஜனும் அடுத்து ம.தி.மு.க. மல்லை சத்யா, தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், சி.பி.ஐ. தா.பாண்டியன் போன்றோர் வர, நீங்க யாரும் இங்கே வரவேண்டாம். எங்க போராட்டத்தை அரசியல் ஆக்கிக் கொச்சைப்படுத்தாதீங்க என ஒட்டுமொத்த மாணவர்களும் கோசமெழுப்பினர். இதைத்தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். மாலை 5 மணிவரை கடற் கரைப் பகுதி பதற்றப் பரபரப்பிலேயே இருந்தது.

இதேபோல் தமிழகப் பெண்கள் செயற்கள அமைப்பினர் இசைமொழி தலைமையில் மத்திய ரயில் நிலையத்தில் திரண்டனர். அங்கு டில்லிக்குப் புறப்படவிருந்த ஜி.டி. எக்ஸ்பிரஸ் ரயிலை குபீரென மறித்தபடி தண்டவாளத்தில் படுத்து டில்லி அரசே! டில்லி அரசே! சிங்களவன் என்றால் இனிக்கிறது. தமிழன் என்றால் கசக்கிறதா? என்றபடி முழுக்கமெழுப்பினர். இதனால் பதற்றமுண்டானது. பெண் பொலிஸார் ஓடிவந்தனர். நீண்ட போராட்டத்திற்குப் பின் அந்த ஆவேச மறத் தமிழிச்சிகளை பெண் பொலிஸார் அப்புறப்படுத்தினர். கடந்த 21 ஆம் திகதி உலகத் தமிழர் பாதுகாப்பு இயக்கமும் இந்திய மாணவர் பெருமன்றமும் மத்திய அரசைக் கண்டித்து சாஸ்திரிபவனை முற்றுகையிட முயன்றனர். அப்போது பொலிஸ் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் கார்த்தி என்ற இளைஞன் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சென்னை பரமணி ஓ.எம்.ஆர். வீதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஊழியர்கள் மனிதச் சங்கிலி அமைத்துப் பரபரப்பை உண்டாக்கினர். ஸ்ரீபெரும்புதூர் பொதுமக்கள், ராஜீவ்காந்தியின் உருவப்பொம்மையைப் பாடைகட்டித் தூக்கிச்சென்று ராஜீவ் நினைவிடம் எதிரே போட்டு எரித்து ஆவேச முழக்கம் எழுப்பினர்.


காஞ்சிபுரம் மாவட்ட அச்சிறுப்பாக்கம் பி.டி.ஓ. அலுவலகம் எதிரே 46 ஊராட்சித் தலைவர்கள் திரண்டு நின்று உண்ணா விரதப்போராட்டத்தில் குதித்து இந்தியாவின் மெத்தனப் போக்கை கடுமையாய்க் கண்டித்தனர். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கல்லூரியிலிருந்து கலெக்டர் அலுவலகம் வரை அமைதிப்பேரணியை நடத்தி நகர மக்களையே திகைப்பில் ஆழ்த்தினர்.

சென்னையைப் போலவே மதுரை மாநகரும் மாணவர் போராட்டத்தால் பதற்றப் பூமியானது. தலைமைத்தந்தி அலுவலக மாடியில் ஆவேசமாக ஏறிய சட்டக்கல்லூரி மாணவர் ஐயாத்துரை இந்தியாவைக் கண்டித்து மாடியிலிருந்து குதிக்கப்போவதாக அறிவிக்க அவரைப் படாதபாடுபட்டு ஏனையவர்கள் சமாதானப்படுத்தினர். அங்கிருந்து பெரியார் பேருந்து நிலையத்தில் நடந்த மாணவர் போராட்டத்திற்கு வந்த ஐயாத்துரையை குறிவைத்த டி.சி. திருநாவுக்கரசு வழியிலேயே அவரை மடக்கித் தாக்கத் தொடங்கினர்.

அனைத்து கல்லூரி மாணவர்களும் மதுரை உயர்நீதிமன்றத்திலிருந்து மூநகரே அதிரும்படி பேரணியாக புறப்பட்டதோடு டி.சி. குழு தடுத்தும் வீறுகொண்டு சென்று தமிழனுக்கு ராஜபக்ஷம் எதிரி. இந்தியாவும் எதிரி என்றபடி ராஜபக்ஷ கொடும்பாவியோடு இந்திய தேசியக் கொடியையும் எரிக்க தேசியக்கொடியை பொலிஸார் பிடுங்கினர். அதற்குள் பாதிக்கொடி எரிந்து சாம்பலானது.

இதேபோல் மதுரை வழக்கறிஞர்கள் கார்களிலும் சைக்கிள்களிலும் மாநகர் முழுவதும் படபடவென முழக்கம் எழுப்பியபடியே வலம் வந்தனர். பின்னர் மதுரை விமான நிலையத்திற்குள் நுழைய முயன்றனர். அவர்களைத் தடுத்த பொலிஸாருக்கும் அவர்களுக்கும் தள்ளுமுள்ளு உண்டானது. பொலிஸ் குழு சரம்சரமாய் இறங்கி விமான நிலையத்திற்கு அரண் அமைத்தனர். இதற்கிடையே அ.தி.மு.கவினரும் பாலச்சந்திரன் படம் போட்ட போஸ்டரை நகர் முழுக்க ஒட்டி ஒருபக்கம் பரபரப்பூட்டினர்.

தொடர் முழக்கப்போரை அறிவித்த நெல்லைமாவட்ட மாணவர்கள் பாளை கட்டபொம்மன் சிலைக்கு எதிரேயுள்ள மைதானத்தில் ஆயிரக்கணக்கில் கூடினர். இந்திய அரசே, சோனியா அரசே செய்த துரோகத்தை மன்னிக்கமாட்டோம் என்று முழக்கமிட போக்குவரத்து ஸ்தம்பித்தது.மாம்பழநகரான சேலத்தை அனலடிக்கும் நெருக்கு நகராக மாற்றி விட்டனர் மாணவர்கள். சேலம் சட்டக் கல்லூரியில் ஆயிரக்கணக்கில் திரண்ட மாணவ, மாணவிகள் ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்து தூக்கிலே தொங்க விடவேண்டுமென முழக்கமிட்ட அவர்கள் பேரணியாகப் புறப்பட்டனர். வழியிலேயே பொலிஸார் பெருந்திரளாக திரண்டு அவர்களை வழிமறித்தனர். இதனால் தள்ளுமுள்ளு



உண்டானது. இதற்கு மத்தியிலும் மாணவர்கள் ராஜபக்ஷ கொடும்பாவியை எரிக்க ரென்சனான ஏ.சி. ரவி சங்கர் மாணவர்களை குண்டுக்கட்டாகக் கைது செய்ய வைத்தார். மாநில அரசே அடக்காதே! அடக்காதே! எங்கள் குரலை அடக்காதே! என்றபடியே பொலிஸ் வாகனத்தில் புறப்பட்டனர். மாணவர்கள் பேரணியை படம்பிடிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் மீதும் பொலிஸ் தாக்குதலை நடத்த இதில் ஒரு செய்தியாளர் காயமடைந்தார். இதற்கிடையே சட்டக்கல்லூரியில் உண்ணாவிரதம் இருந்து வந்த மாணவர்களில் இருவர் சுருண்டுவிழ அவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சேலம் அரசு ஐ.ஐ.டி. மாணவர்கள் போராட்டத்திற்குக் கிளம்புவதைக் கண்ட அதிபர் அவர்களை உள்ளறைக்கு அழைத்துச்சென்று தாக்குதல் நடத்த அங்கே பரபரப்பான பரபரப்பு போர்ாட்டத்தில் குதித்த மாணவர்களை ஏ.சி. சந்திரசேகர் கடுமையாக மிரட்ட தமிழுணர்வாளர்கள் அவருக்கு எதிராக திரண்டனர். விழுப்புரத்தில் திரண்ட வழக்கறிஞர்கள் தாரை தப்பட்டை முழக்க, ராஜபக்ஷவின் கொடும்பாவியை பாடைகட்டி ஊர்வலமாக தூக்கி வந்து தலைமைத் தபால் அலுவலகம் எதிரே போட்டு எரித்தனர். உளுந்தூர்பேட்டையில் ராஜபக்ஷ கொடும்பாவியை எரித்த 20 இற்கும் மேற்பட்ட மாணவர்களை ஸ்ரேசனுக்குக் கொண்டுவந்த எஸ்.ஐ. எழிலரசி, தேசிய தலைவர் கொடும்பாவியை எரித்த குற்றத்திற்காக கைது என்று எழுதி மாணவர்களிடம் கையெழுத்துக் கேட்க, சட்டமாணவரான பெலிக்ஸ், இந்தியாவுக்கும் தேசியத் தலைவர் ராஜபக்ஷவா? இதில் கையெழுத்துப் போடமாட்டேன் என்று கொதித்தெழுந்தார். வழக்கறிஞர்கள் திரண்டனர். தகவல் மேலதிகாரிகளுக்குப் போக, ஏம்மா நமக்கு யார் தேசியத் தலைவர். அதே தெரியலையா? முதல்ல அவங்களயெல்லாம் வெளியில அனுப்பு என அவருக்கு உத்தரவிட்டனர்.

பெரம்பலூர் தந்தை ஹேறன் ஸ்ரோவர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் பெருந்திரளாய் தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் குதிக்க பலமணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. பேருந்து நிலையத்தில் பெரம்பலூர் மாவட்ட வாடகை கார், ஆட்டோ, ஓட்டும் சங்கங்கள் நடத்திய உண்ணா விரதத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். வரவேற் புரையாற்றிய கனகுவின் பேச்சு எல்லோரையும் . உஷ்ணப்படுத்தியது.

விருத்தாசலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்லவன் ரயிலை மறிக்க அவர்களை பொலிஸார் தண்டவாள ஜல்லிக்கற்களில் இரக்கமேயில்லாமல் தரதரவென இழுத்துச்சென்று கைது செய்தனர். மன்னார்குடி பெரியார் சிலை முன்பு மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் அரியராஜன் தலைமையில் பெருந்திரளாகக் குவிந்த மாணவர்கள் வீதிமறியலில் குதிக்க 3 மணிநேரத்திற்கு மேல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை எனச் சகல பகுதிகளிலும் உக்கிரமாக நடந்துகொண்டிருக்கிறது மாணவ மறவர்களின் போர்.

முழுவதையும் பதிவுசெய்ய பக்கம் போதாது என்கிற அளவுக்கு தமிழகம் தழுவிய அளவில் பிரளயமாய் வெடித்திருக்கும் இந்தப்போராட்டம் மேலும் வீரியத் திசையை நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது.

**நக்கீரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாம பிரதேசத்திற்கான தாச்சிச் சுற்றுப் போட்டிகள்





(யாழ்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் சன சமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வலிகாமம் பிரதேச விளையாட்டு கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட தாச்சி போட்டியின் இறுதி போட்டி இன்று புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இதில் முதல் சுற்றுப் போட்டியில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து விளையாடிய வைகறை விளையாட்டுக்கழகம் 9:6 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி காலிறுதிப் போட்டியில் சுழிபுரம் பயிஸ்றார் விளையாட்டுக்கழகத்தினை எதிர்கொண்டு 4:3 எனும் புள்ளியடிப்படையிலும் வெற்றியீட்டி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி அரையிறுதியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகத்துடன் மோதி 8:7 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

காளியம்பாள் விளையாட்டுக்கழகம் முதற் சுற்று போட்டியில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினை எதிர்கொண்டு 13:4 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி காலிறுதியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 10:7 எனும் புள்ளியடிப்படையில் வெற்றியீட்டி அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில் உடுவில் ஆலடி சிந்து ஏ விளையாட்டுக்கழகத்துடன் மோதி 8:6 எனும் புள்ளியடிப்படையில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இன்று இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள இவ் இறுதிப்போட்டியிலும் பரிசளிப்பு நிகழ்விலும் முதன்மை விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவுள்ளதோடு நிகழ்வினை விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையேற்று நடத்தவுள்ளார். (அ-4)

# வடகொரியா தாக்கினால் பதிலடி கொடுக்க தயாராகுங்கள்

## தென் கொரிய அரசு உத்தரவு

(பிஜோங்கியாங்)

வடகொரியா தாக்கினால் பதிலடி கொடுக்க தயாராக இருங்கள் என்று இராணுவ அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு தென்கொரிய ஜனாதிபதி பார்க் ஜியூன் ஹை உத்தரவிட்டுள்ளார்.

உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி அணு ஆயுத சோதனை, ரொக்கெட் ஏவுதல் ஆகியவற்றில் வடகொரியா ஈடுபடுவதால் பொருளாதார தடைக்கு ஆளாகி இருக்கிறது. இந்த நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருவதால் வடகொரியா கடும் கோபத்தில் இருக்கிறது.

இதேவேளை கொரியா தீபகற்பத்தில் அமைந்துள்ள வடகொரியா, தென்கொரியா நாடுகள் இடையே சமீபகாலமாக மோதல் போக்கு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா போர் ஒத்திகை நடத்துவதோடு அதில் அமெரிக்காவின் அதிநவீன பி-2, எப்-22 போர் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கும் வடகொரியா அதை நிறுத்தாவிட்டால் அமெரிக்கா, தென்கொரியா மீது தாக்குதல் நடத்துவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் பீரங்கி படையையும் ஏவுகணைகளையும் தயார் நிலையில் வைத்துள்ளதுடன் நேற்று முன்தினம் தென்கொரியாவுடன் போர் பிரகடனத்தை வெளியிட்டது. இதனால் கொரிய தீபகற்ப பகுதியில் போர் மூளும் பதற்றம் அதிகரித்துள்ளது.

எனினும் வடகொரியாவின் இந்த மிரட்டல் வெற்று சவால் என அமெரிக்காவும் தென்கொரியாவும் குறிப்பிட்டுள்ளன. இருப்பினும் வடகொரியா தாக்குதல் தொடுத்தால் அதை முறியடிக்க தென்கொரியாவும் தயாராகி வருகிறது.

இந்நிலையில் தென்கொரியா நாட்டு பெண் ஜனாதிபதி பார்க் ஜியூன் ஹை நேற்று இராணுவ அமைச்சர் மற்றும் இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டி அவசர ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அவர் தென்கொரியா மற்றும் மக்களுக்கு எதிராக எந்த விதமான எரிச்சலூட்டும் செயல் நடத்தப்பட்டாலும் உடனே கடுமையான பதிலடி கொடுக்க தயாராக இருங்கள். இதில் அரசியல் பரிசீலனைக்கு இடமில்லை என்று ஆணித்தரமாக கூறியுள்ளார்.

இதன்மூலம் மேலிட உத்தரவு எதையும் எதிர்பார்த்து காத்திராமல் உடனே தாக்குதலை தொடுக்க தென்கொரிய இராணுவத்திற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டி விட்டார் என்றே இராஜதந்திர தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-5)

# கலகத்தை இனப்படுகொலையென அறிவிக்க அமெரிக்கா மறுப்பு

இந்தியாவில் கடந்த 1984 ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறையில் ஆண், பெண் என பல சீக்கியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். தற்போது இந்த வன்முறை சம்பவத்தை இனப்படுகொலை என அறிவிக்க அமெரிக்கா மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக அமெரிக்காவில் வாழும் சீக்கிய அமைப்பினர், அமெரிக்க அரசு 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற கலகத்தை இனப்படுகொலை என அறிவிக்க வலியுறுத்தி இணையத்தளம் வழியாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

கடந்த நவம்பர் 15 இல் தொடங்கப்பட்ட இந்த பிரசாரத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஒரு சில வாரங்களிலேயே 30 ஆயிரம் கையெழுத்துகள் வந்து சேர்ந்தன. இதனை தொடர்ந்து தற்போது ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் இதற்கு பதிலளிக்கும் விதமாக மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டது.

மேலும் இந்த வன்முறை சம்பவத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டு குழி தோண்டி புதைக்கப்பட்டு உள்ளன என்று தெரிவித்துள்ளது. (அ-5)

# இலங்கையின் போர்க்குற்றங்களை கண்டித்து நடிகர்கள் போராட்டம்



(சென்னை)

இலங்கையின் போர்க் குற்றங்களை கண்டித்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்று இந்திய நடிகர்-நடிகைகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தியாகராய நகர் அபி புல்லா சாலையில் உள்ள நடிகர் சங்க வளாகத்தில் அமைக்கப்பட்ட 160 அடிநீளம், 60 அடி அகலம் கொண்ட பந்தலில் நேற்று காலை தொடங்கிய இப்போராட்டத்தில் முன்னணி நடிகர், நடிகைகள் கறுப்பு ஆடை அணிந்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தென்னிந்திய தமிழ் திரைப்பட நடிகர் சங்க தலைவர் சரத்குமார் தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் நடிகர் சங்க பொதுச்செயலாளர் ராதாரவி, துணைத்தலைவர் விஜயகுமார், பொருளாளர் வாகை சந்திர சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடிகர்கள் ரஜினி, சிவகுமார், சூர்யா, கார்த்தி, சத்தியராஜ், கருணாஸ், மனோபாலா, வி.எஸ்.ராகவன், சார்லி, நடிகர்கள் அஜித், தனுஷ், கே.பாக்கியராஜ், பிரகாஸ்ராஜ், பிரபு, பிரபு விக்ரம், பாண்டியராஜன், வை.ஜி.மகேந்திரன், எஸ்.வி. சேகர், நாசர் ஆகியோர் உட்பட பெருமளவான நடிகர்களும் தேவயானி, ஊர்வசி, அம்பிகா உட்பட முன்னணி நடிகைகள் பலர் கலந்து கொண்டனர்.

திரையுலகின் அனைத்து சங்கத்தினரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சின்னத்திரை நடிகர், நடிகைகளும் இவ் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, அவுஸ்திரேலியாவில் தலைவா படப்பிடிப்பில் இருக்கும் விஜய், நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாருக்கு உண்ணாவிரதத்துக்கான ஆதரவு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்போராட்டத்தை முன்னிட்டு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து படப்பிடிப்புக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# பால், பழம் கோருகிறார் பலாத்கார குற்றவாளி

விமானப்படைப் பதிவாளர் தேர்வுக்கு தயாராவ்தால் போசாக்கான உணவுகள் வழங்க திஹார் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என டில்லி மாணவி பலாத்கார வழக்கில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளி வினய் சர்மா மனுத்தாக்கல் செய்துள்ளார்.

டில்லியில் மருத்துவ மாணவி பலாத்கார வழக்கில் முகேஷ், வினய் சர்மா, அக்சய் மற்றும் பவன் ஆகியோர் திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வினய்சர்மா என்பவன் விமானப்படையின் பதிவாளர் தேர்வுக்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இவனுக்கு தேவையான புத்தகங்கள் மற்றும் பயிற்சியாளரை வழங்கவேண்டும் என டில்லி நீதிமன்றத்தில் வினய்சர்மா ஏற்கனவே மனு செய்திருந்தான். அதன்படி போட்டித் தேர்வு புத்தகங்கள் திஹார் சிறை நிர்வாகம் வினய் சர்மாவுக்கு வழங்கி பயிற்சியாளருக்கும் ஏற்பாடு செய்தது.

இந்நிலையில் டில்லி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த வழக்கு விசாரணையின் போது வினய் சர்மாவின் சார்பில் மற்றொரு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில் விமானப்படை கிளார்க் தேர்வுக்கு தயாராவதால் தனக்கு பால், பழம் போன்ற போசாக்கான உணவுகளை வழங்க திஹார் சிறை நிர்வாகத்துக்கு உத்தரவிடவேண்டும் என வினய் சர்மா வேண்டுகோள் விடுத்திருந்தான்.

இதையடுத்து மனுகுறித்து கருத்து தெரிவிக்க வேண்டும் என திஹார் சிறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். விடி வெள்ளிக்கு சற்று முன்தான் இருட்டு வெகு அதிகமாக இருக்கும். *~ முல்லர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மதவாதம் நோக்கிய உசுப்பேத்தல்கள்

வன்னிப் போருக்குப் பின் இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதென்று மார் தட்டிய சம்பவங்களும்; யுத்த வெற்றியை இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு, இராணுவத் தளபதி அறிவிக்கும் நிகழ்வுகளும் எளிதில் மறந்து போகக்கூடியவையல்ல.

இதற்கு அப்பால், போர் வெற்றிக்கும் ஓராண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் நடந்தேறின.

ஒரு புறத்தில் ஓராண்டு நினைவஞ்சலியும் மறுபுறத்தில் வெற்றியின் ஓராண்டு நிறைவுக் களிப்புமாக இலங்கை மண்ணில் நடந்தன.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதென்று உரக்கக் குரலெழுப்பி அதற்கு உரிமையும் கோரப் பட்டது.

உரிமை கோரலில் இந்த நாட்டின் ஜனாதி பதிக்கும் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட, அதன்பின் நடந்தவற்றை நாம் சொல்லித் தெரிய வேண்டிய தேவை இருக்காதென்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம்.

இவை எல்லாம் நடக்கும்போது இனப்பிரச் சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வ தேச அழுத்தம் அதிகரிக்க, பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என்று கூறியது மகா முட்டாள் தனம் என அரசு உணரத் தலைப்பட்டது.

பயங்கரவாதம் இடையிடையே தலைதூக்கு கிறது. பயங்கரவாதம் மீண்டும் உயிர்ப்புப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கின்றதென்று கூறுவதன் மூலமே தமிழர்களின் பிரதேசங்களில் படை முகாம்களை நிலைநிறுத்தவும், தமிழ் மக்களின் வாழ்விடங்களை கபளீகரம் செய்யவும் முடியும் என்று முடிபெடுக்கப்பட்டது.

பயங்கரவாதம் என்பதைத் தொடர்ந்து உச்சா டனம் செய்வதன் மூலம் சர்வதேசத் தலையிடி களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று நினைத்து அதற்கான காய்நகர்த்தலை மேற் கொண்டாலும் பெறுபேறுகள் பாதகமாக இருந்த மையால், மாற்றுவழி பற்றிச் சிந்திக்கப்படுகிறது.

அச்சிந்தனையின் முடிவு மதவாதத்தின் மூலம் மக்களை தூண்டிவிட்டு சுமுக நிலைமைகளை குழப்பிவிடுவதாகும்.

இனவாதத்தின் அடிப்படை கூட, மதவாதமாக இருந்ததாயினும், மதவாதம் தனித்து கொடி தூக்கும்போது அது;

தமிழ், முஸ்லிம் என்ற மூல வேர்களை அறுக்காமல்,மரம், கிளை, இலை என்பவற்றை அறுத்து அடிவேரை கருக்கச் செய்யும்.

அதற்கான யுக்திகள் மடை ஏறத் தொடங்கி விட்டன. நாம் என்ன செய்ய முடியும்?

## அரச காணியில் சிங்களக் குடியேற்றம்

# தமிழ்–சிங்கள மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தும்

## அலென்ரின் எம்.பி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி பகுதியில் தேசிய வீடமைப்பு அதி கார சபைக்கு சொந்தமான காணியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டமை தமிழ்–சிங்கள மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகவுள்ளது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலென்ரின், அமைச்சர் விமல் வீரவன்ச விடம் நேரடியாகத் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் வீட மைப்பு மற்றும் நிர்மாண பொறியியல் துறை அமைச் சரு மான விமல் வீரவன்ச நேற்று யாழ்ப் பாணத்திற்கு விஜயம் மேற் கொண்டார்.

இந்த விஜயத்தின் பாது யாழ். குருநகர் தொடர் மாடி கட்டிட புனர் நிர் மாணப் பணிகளை அமைச்சர் விமல் ஆரம்பித்து வைத்திருந்தார். இந்த நிகழ்வின்போதே அமைச்சரிடம் பாரா ளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பி னர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது, யாழ்.மாவட் டத்தைப் பொறுத்தவரை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணிகள் தொடர் பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின் றன அதிலும் குறிப்பாக நாவற்குழியில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றம் தமிழ்–சிங்கள மக்களுக்கிடையே பிரச்சினை யை ஏற்படுத்த கூடியதாகவுள்ளது எனத் தெரிவித்தார். (எ–6)

# யாழின் அபிவிருத்தி பணிகளை எடுத்து விளக்கினார் மேயர்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி கலாசாரத்தில் வாழ்ந்த வர்கள் என்பதனால் சுடுகாட்டை விரும்பு கின்றனர் என யாழ் மாநகர சபை முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எதிர்க் கட்சியினர் மீது குற்றம் சாட்டி யுள்ளார்.

மாநகர சபையின் இந்த மாதத்திற் கான மாதாந்த பொதுக்கூட்டம் அண் மையில் முதல்வர் தலைமையில் மாநா ட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது எதிர்க் கட்சி உறுப்பி னர் விந்தன் கனகரத்தினத்திற்கும் முதல்வருக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையினை முதல்வர் சுடுகாடாக மாற்றி வருகின்றார் என உறுப்பினர் விந்தன் விடுத்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு பதிலளிக்கும் வகையிலும் யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சியினர் மேற் கொண்டு வரும் அபிவிருத்தி பணிகள் தொடர்பிலும் ஆதாரத்துடன் எடுத்துக் கூறப்பட்டதோடு ஆயுதப் போராட்டம் இடம் பெற்ற காலப்பகுதியில் தான் சுடுகாடாக எல்லாம் காணப்பட்டது. ஆனால் தற் போது ஏற்பட்டுள்ள ஜனநாயக சூழலில் எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது.

ஆயுதக் கலாசாரத்தில் வளர்ந்தவர் களுக்கு அபிவிருத்தியை இனம் கண்டு கொள்ளத் தெரியாது எனவும் குற்றம் சாட்டினர்.

அத்தோடுதுப்பாக்கிதான் உங்களுக்கு சரி என எதிர்க் கட்சியினரை பார்த்து தான் ஒருபோதும் கூறவில்லை எனவும் பத்திரி கைகள் தவறாக செய்திகளை பிரசுரித்து விட்டன எனவும் தெரிவித்தார். (அ–6)

## ஊடகவியலாளரிடம் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஊடக வியலாளர் ராசியா விக்கிரமதுங்க விடம் பொலிஸார் விசாரணை நடத்தி யுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ராசியாவின் வீட்டுக்கு பிடிவிராந்து டன் சென்ற பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தியுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மன்னார் பிரதே சம் தொடர்பில் வெளியிட்ட சில கட்டு ரைகள் தொடர்பில் விசாரணை நடத்தப் பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்தக் கட்டுரைகள் தொடர்பில் ஏற்கெனவே விசாரணைகள் நடத்தப் பட்டதாக தெரவிக்கப்படுகிறது. (எ–11)

## வாகன விபத்தில் படுகாயம்

(புளியம்பொக்கனை)

துவிச்சக்கர வண்டி–மோட்டார் சைக் கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக் கிளில் பயணித்த நபர் படுகாயமடை ந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரு கிறார்.

இச்சம்பவம் நேற்று 11 மணியள வில் தருமபுரம் கிராம அலுவலகத் திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவரு வது,

வீதியால் சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டியை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதி லேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த இ.வனேஸ்வரன் (வயது34) என்ற நபரே படுகாயமடைந்து தரும புரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை க்கு அனுப்பப்பட்டுள்ளார். (அ–3–263)

# குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

(மிருசுவில்)

குளத்தினுள் குளிக்கச் சென்ற முதிய வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மிருசுவில் கொட்டிகை அம்மன் கோயில் குளத்தடியில் இடம் பெற்றுள்ளது.

இதில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது–65) என்பவரே பலியானவராவார்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றார்கள்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக் காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது. (எ–11,85)

# பரிசளிப்பு விழாவும் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் பரிசளிப்பு விழாவும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நினைவுச் சொற்பொழிவும் இன்று புதன் கிழமை பிற்பகல் 6 மணிக்கு மட்டுவில் வடக்கு மாதுமை கல்விப் பூங்காவில் அதன் இயக்குநர் சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந் தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் ரி. கணேசபாலேந்திரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் தி.தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பண்டிதமணிநினைவுச்சொற்பொழிவை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரை யாளர் ச.லலீசன் வழங்கவுள்ளார்.(அ–5)

# தொழிற்சாலை திறப்பு விழா

யு.எஸ்.எயிட் அமெரிக்க நிறுவனத் தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கள்ளப்பாடு தெற்கு மாதர் கிராம அபி விருத்திச்சங்க கருவாடு பதனிடல் தொழிற் சாலை இன்று காலை 11 மணியளவில் யு.எஸ் எயிட் அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதி டோனால் திறந்து வைக்கப்பட வுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாய கன் , சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பொன்னுத்துரை குகநாதன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (அ–3–267)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## பக்குவம் பெற்றால் துன்பமில்லை

✦ மக்களில் பலர் புகழ் வேண்டியோ அல்லது புண் ணியம் பெற வேண்டியோ தர்மம் செய்கின்றனர். அத் தகைய செயல்கள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.

✦ பரோபகாரம் செய்பவர்கள் இறைவனுக்காக மட்டுமே செய்வதே சிறந்ததாகும். இறைவனுடைய நியதியில் உலகில் உள்ள அனைத்து விடயங்களுக்கும் இடமுண்டு. அதனால் நம்முடைய கொள்கைதான் சிறந்தது. மற்றவர்கள் கொள்கைகள் தப்பானவை என்று எண்ணம் கொள்வது கூடாது.

✦ பிறருக்கு போதிப்பது சுலபமல்ல. ஒருவன் வாழ்வில் இறைவன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற பின்னரே பிறருக்குப் போதனை செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் அது நல்ல பயனைப் பிறருக்குத் தரும்.

✦ மனிதனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவனைப் பெரிதும் பாதிக்கின்றன. அதனால் தெய்வீகப் படங்களை நாம் இருக்குமிடத்தில் எப்போதும் கண்ணில் படும்வகையில் வைத்திருப்பது நல்லது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நம் மனதில் அருளுணர்வு உதிக்கத் தொடங்கும்.

✦ செடி பெரிய மரமான பின்பு அதற்கு வேலி தேவையில்லை. ஒரு யானையைக்கூட கட்டி வைக்கும் அளவிற்கு வலிமை அந்த மரத்திற்கு உண்டாகிவிடும். அதைப்போல் பக்குவம் உண்டான மனிதனுக்கும் உலக விடயங்கள் எந்த இன்னலையும் உண்டாக்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கிறது சம்பளப் பிரச்சினை;

## 'கிங்பிஷர்' எயர்லைன்ஸ் பணியாளர்களால் கோலியின் வீடு முற்றுகை!

தொழிலதிபர்



பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ், கிங்பிஷர் எயர்லைன்ஸ் உட்பட பல நிறுவனங்களின் உரிமையாளரான விஜய் மல்லையா.

கர்நாடகாவின் தொழிலதிபர் விஜய் மல்லையாவுக்கு சொந்தமான கிங்பிஷர் எயர்லைன்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகளால் விமான நிறுவனம் அண்மையில் மூடப்பட்டது. இதனால் அங்கு பணியாற்றிய ஆயிரக் கணக்கான ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

அத்துடன் விஜய் மல்லையா பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணியினையும் நடத்தி வருகிறார். இதில் கிரிக்கெட் வீரர்கள் அதிகப்படியான தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டு அணியில் விளையாடி வருகிறார்கள்.

சம்பள நிலுவை தராவிட்டால் பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணி பங்குகொள்ளும் போட்டிகளை நடத்த விடமாட்டோம் என்று கடந்த 21ஆம் திகதி கிங் பிஷர் ஊழியர்கள் எச்சரித்தார்கள்.

இந்நிலையில், ஐ.பி.எல்.- 6 கிரிக்கெட் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் கிங்பிஷர் விமான நிறுவனத்தின் பணியாளர்கள் டில்லியில் உள்ள பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணியின் தலைவர் விராட் கோலியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இவர்கள், விராட் கோலி பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணியை விட்டு வெளியேற வேண்டும் என்று கோஷமிட்டனர். மேலும் விஜய் மல்லையா மற்றும் கிங்பிஷர் நிறுவனத்திற்கு எதிராக கறுப்புக் கொடி காட்டி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். விஜய் மல்லையா கிரிக்கெட்டிலும், பாரமுலா கார்பந்தயங்களில் கவனம் செலுத்தி விட்டு தங்களின் பல மாதச் சம்பளங்களைக கொடுக்கவில்லை என குற்றஞ்சாட்டினர்.

வீட்டில் இருந்த விராட் கோலியின் தாயார் பணியாளர்களை சந்தித்து, அவர்களை சமாதானப்படுத்தினார். ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் கோலி அந்த அணியில் விளையாடுகிறார். விஜய் மல்லையாவிடம் பேசி உங்களுக்கு தர வேண்டிய சம்பள நிலுவையை வாங்கித் தர ஏற்பாடு செய்ய சொல்கிறேன் என்று அவர்களிடம் கூறினார். கோலியின் தாயாரின் உறுதிமொழியால் பணியாளர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

மந்திராலோசனை....



மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரிக்கிப்பொண்டிங்கும் அவ்வணியின் ஆலோசகர் அனில் கும்பளேயும் நேற்று நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் மந்திராலோசனை நடத்திய போது....

## களியாட்ட வரியை செலுத்துமாறு நோட்டிஸ்

ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் அணிகளில் ஒன்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ். நடப்பு சம்பியனான அந்த அணிக்கு நடிகர் ஷாருக்கான், நடிகை ஜூகி சாவ்லா, ஜெய் மேத்தா ஆகியோர் உரிமையாளர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ரூ.78 இலட்சம் களியாட்ட வரியை உடனடியாக செலுத்த வேண்டும் என்று கொல்கத்தா மாநகராட்சி நோட்டீஸ் அனுப்பி உள்ளது. கொல்கத்தா அணி கடந்த ஆண்டு ரூ.25 இலட்சமே களியாட்ட வரி செலுததியிருந்தது. ரூ.50 இலட்சத்தை கொல்கத்தா மாநகராட்சிக்கு நிலுவையாக வைத்திருந்தது.

அந்த நிலுவைத் தொகையையும் சேர்த்து ரூ.78 இலட்சத்தை உடனடியாக செலுத்துமாறு கொல்கத்தா அணி உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல். போட்டியில் மே.தீவுகளின் 9 வீரர்கள்

கடந்த 2012ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம், கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ரி20 இறுதி ஆட்டத்தில் உலகக்கிண்ணத்தை தன்வசப்படுத்தியது மேற்கிந்தியத் தீவுகள். அந்த அணியில் அப்போது விளையாடிய 11 பேரில், 9 பேர் தற்போது நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டிகளில் களமிறங்குகின்றனர்.

கிறிஸ் கெயில் (ரோயல் சலஞ்சேர்ஸ்), மார்ட்டின் சாமுவேல்ஸ் (புனே வாரியர்ஸ்), டிவைன் பிராவோ (சென்னை சுப்பர் கிங்ஸ்), கிரன் போல்லார்ட் (மும்பை இண்டியன்ஸ்), ஆண்ட்ரூ ரஸ்ஸல் (டெல்லி டேர்டெவில்ஸ்), டாரன் சமி ( சன் ரைசர்ஸ்), சுனில் நரைன் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), ரவி ராம்பால் (ரோயல் சலஞ்சேர்ஸ்) மற்றும் சாமுவேல் பத்ரி (ராஜஸ்தான் ரோயல்ஸ்) ஆகியோர் இந்த போட்டியில் பங்குகொள்கின்றனர்.

## வீரர்களை பகிரங்கப்படுத்த வேண்டாம் — ஆஸி.

எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான 30 பேர் கொண்ட குழாமை ஒவ்வொரு நாடும் இவ் வார இறுதிககுள் சர்வதேசக் கிரிக்கெட் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்நிலையில் தங்களது 30 பேர் கொண்ட குழாமின் விபரங்களை கையளித்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவற்றினை பகிரங்கப்படுத்த வேண்டாமென சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபையின் கோரிக்கையை ஏற்றுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, அணிகளைப் பகிரங்கப்படுத்த வேண்டாமெனக் கிரிக்கெட் சபைகள் கோரினால் அதனை வெளியிடப்போவதில்லை என அறிவித்துள்ளது.

## பாகிஸ்தான் அணியின் சிரேஷ்ட வீரர்கள் நீக்கம்

இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியின் 30 பேர் கொண்ட குழாமில் சிரேஷ்ட வீரர்களான யுனிஸ்கான், அப்துல் ரஷாக் ஆகியோர் அணியில் இடம்பிடிக்கவில்லை.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம் :**

நசீர் ஜம்ஷெத், மொஹமட் ஹபீஸ், இம்ரான் பர்ஹத், அஹமட் ஷெஷாத், மிஸ்பா உல் ஹக், ஹரிஸ் சொஹைல், அசத் சபீக், உமர் அக்மல், சொய்ப் மலிக், உமர் அமின், சொஹைல் தன்வீர், ஹம்மட் அர், அஷார் அலி, ஷகிட் அப்ரிடி, அசத் அலி, அன்வர் அலி, ஜூனைட் கான், மொஹமட் இர்பான், வகாப் றியாஸ், உமர் குல், றஹாத் அலி, எய்ஷான் அடில், இம்ரான் கான், அய்ஸஸ் சீமா, யசீர் அரபாத், சயீட் அஜ்மல், அப்துர் ரெக்மான், ஷல்பிகர் பாபர், கம்ரன் அக்மல், மொஹமட் றிஸ்வான்.

## 12 முறை போதைப்பொருள் பயன்படுத்தியதாக ஒலிம்பிக் வீரர் மீது

# குற்றச்சாட்டு!

ஒலிம்பிக் குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங் 12 தடவை போதைப்பொருள் உட்கொண்டதாக பஞ்சாப் பொலிசார் தமது புலனாய்வு விசாரணையில் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் விஜேந்தர் சிங் மீதான போதை மருந்து பயன்படுத்திய பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவரிடம் உடனடியாக ஊக்க மருந்து சோதனை நடத்த மத்திய விளையாட்டு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

கனடா வாழ் இந்தியரான அனூப் சிங் கஹலான் கடந்த மாதம் 3ஆம் திகதி பஞ்சாபில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.130 கோடி மதிப்பிலான 26 கிலோ ஹெராயின் கைப்பற்றப்பட்டது.

கஹலானிடம் நடத்திய விசாரணையில், ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங் மற்றும் அவரது நண்பர் ராம் சிங்குடன் அடிக்கடி கைபேசியில் பேசியதாகக் கூறியிருந்தார்.


இதைத் தொடர்ந்து பஞ்சாப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணைக்குப் பின் இதுவரை நடத்தப்பட்ட புலனாய்வின்படி, விஜேந்தர் சிங் 12 தடவையும், அவரது நண்பர் ராம் சிங் 5 தடவையும் ஹெராயின் போதைப் பொருளை உட்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இப்பிரச்சினைக்கு முடிவு காணும் வகையில் அவரிடம் ஊக்க மருந்து சோதனை நடத்த வேண்டும் என தேசிய ஊக்க மருந்து தடுப்பு ஆணைய இயக்குநருக்கு மத்திய விளையாட்டு அமைச்சகம் கடிதம் எழுதி உள்ளது.

சிறந்த விளையாட்டு வீரர் மீதான இதுபோன்ற புகார்கள், நாட்டில் உள்ள மற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் மனத்திண்மையை குலைக்கும். இதனால் குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங்கிடம் உடனே ஊக்க மருந்து சோதனை நடத்த வேண்டும் என தேசிய ஊக்க மருந்து தடுப்பு ஆணையத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சியாளர் ஆலோசனை:**


இதனிடையே, தலைமுடி மற்றும் இரத்த மாதிரிகளை பொலிஸாரிடம் வழங்கி விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு இந்தியக் குத்துச்சண்டை பயிற்சியாளர் ஜி.எஸ்.சாந்து விஜேந்தருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.




குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் கோலாகல ஆரம்பம்





கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஐ.பிஎல் திருவிழாவின் ஆரம்ப விழா கொல்கத்தாவில் கோலாகலமாகத் தொடங்கியது.

ஆறாவது ஐ.பி.எல். இருபது–20 தொடரின் (ஏப் 3 – மே 26) முதல் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், டில்லி டேர்டேவில்ஸ், கொல்த்தா நைட்ரைடர்ஸ் உட்பட 9 அணிகள் பங்கேற்கின்றன. மொத்தம் 76 போட்டிகள் என அடுத்த 51 நாட்களுக்கு கிரிக்கெட் ரசிகர்களுக்கு சிறந்த விருந்து காத்திருக்கிறது.

இதன் தொடக்கவிழா நேற்று மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் ஆரம்பமானது.

ஆரம்ப விழா நடைபெற்ற மைதானம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளை பார்க்கலாம். கால்பந்து போட்டிக்கான இந்த மைதானத்தில் பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டிருந்தது.

செயற்கை இழையிலான களம் பாதிக்கப் படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் மாநில முதல்வர் மம்தா பானர்ஜி கலந்து கொண்டார். இந் நிகழ்ச்சியில் சீனாவின் ரெட் பாப்பி அமைப்பை சேர்ந்த பெண் இசைக்கலைஞர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடந்தன. விழாவில் வண்ண விளக்குகள் மற்றும் டிரம்களுடன் கூடிய நடனங்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து கப்டன்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். தொடர்ந்து பாலிவூட் நடிகரும் கொல்கத்தா அணி உரிமையாளருமான ஷாருக்கான், முன்னணி நடிகை களான கத்ரினா கைப், தீபிகா படுகோனே ஆகியோர் நடனமாடி ரசிகர்களை மகிழ்வித்தனர்.

# திரண்டது திரையுலகம்...

தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் காலை 9 மணி முதல் சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரதம் மாலை 5 மணிக்கு நிறைவு பெற்றது.

தென்னிந்திய நடிகர் சங்க உண்ணா விரத அரங்கில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.,

நடிகர் சங்கத்தின் தீர்மானங்களை சங்கத் தலைவர் சரத்குமார் வாசித்தார். உண்ணா விரதத்தை சட்டக் கல்லூரி மாணவர் தனசேகரன் மற்றும் லயோலா கல்லூரி மாணவர் ஜோன் பிரிட்டோ ஆகியோர் பழச்சாறு கொடுத்து நிறைவுசெய்து வைத்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ரஜினி, கமல்ஹாசன், அஜித், சரத்குமார், சூர்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் சென்னை ஹபிபுல்லா சாலையில் உண்ணவிரதம் நடைபெற்றது. இதற்காக 160 அடி நீளம், 60 அடி அகலத்தில் பந்தல் அமைக்கப் பட்டிருந்தது.

காலை 9 மணிக்கு நடிகர் சங்க தலைவர் சரத்குமார் தலைமை தாங்கி உண்ணா விரதத்தை தொடக்கி வைத்தார்.

இதில் ரஜினி, கமல், அஜித், சிவகுமார், சத்யராஜ், சூர்யா, கார்த்தி, தனுஸ், ராதாரவி, செந்தில், வாகை சந்திரசேகர், கருணாஸ் ,சார்லி, விஜயகுமார், மன்சூர் அலிகான், கே.பாக்யராஜ், பாண்டிராஜன், பிருத்வி, அருண் விஜய், மனோபாலா, கே.ராஜன் ,எம்.எஸ்.பாஸ்கரன், வி.எஸ்.ராகவன், ராஜேஷ், ஹரிகுமார், ஜி.சேகரன், உதய்கிரண், சரவணன், டெல்லி கணேஷ், தியாகராஜன், தியாகு, ஆனந்தராஜ், நிழல்கள் ரவி ,எஸ்.வி.சேகர், தலைவாசல் விஜய், அபிஷேக், நடிகைகள் ரதிகா, தேவயாணி, தன்ஷிகா, நளினி, சத்யப்ரியா ,பசி சத்யா, கும்தாஜ், நமீதா, திரிஷா உள்ளிட பலரும் மற்றும் பிலிம்சேம்பர், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் சங்கத்தினர், பெப்சி மற்றும் சின்னத்திரை நடிகர், நடிகைகள் கலந்து கொண்டனர்.

அவுஸ்திரேலியாவில் தலைவா படப்பிடிப்பில் இருக்கும் விஜய், நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாருக்கு உண்ணாவிரதத்துக்கான ஆதரவு கடிதம் அனுப்பி இருந்தார்.

உண்ணாவிரதத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. போராட்டத்தையொட்டி படப்பிடிப்புகள் ரத்து செய்யப்பட்டன.

(மற்றொரு செய்தி உள்ளே)

# நிறைவேறிய 7 தீர்...

மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

➢ இலங்கையில் நடந்த இனப்படுகொலையில் பங்குள்ள போர்க் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

➢ மேற்கூறிய இரண்டும் நடக்கும் வரையில் இந்திய அரசு இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

➢ இலங்கைக் கடற்படையால் இதுவரை 578 தமிழக மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

➢ இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக சட்டசபையில் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

➢ இலங்கைப் பிரச்சினை தொடர்பாக போராட்டம் நடத்திவரும் மாணவர்கள், அரசியல் கட்சியினர் தமிழக மக்கள், உலகத் தமிழர்கள் ஆகியோரின் உணர்வுகளை மதித்து இந்த விவகாரத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

➢ போனால் திரும்பிவராது உயிர், போராட உயிர் தேவை. அதனால் மாணவர்களும், இளைஞர்களும் இனி உயிர் தியாகம் செய்யாமல் அறவழியில் போராட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஈழம் பிறக்கட்டும், ஈழம் பிறக்கட்டும் என்று முழங்கி தனது உரையை முடித்துக் கொண்டார். (எ–11)

# யாழ்ப்பாண...

களாக வட பகுதிகளில் வெள்ளை வான் கடத்தல் மீண்டும் தொடங்கிவிட்டதாகவும், தெருக்களில் நடமாடவே தமிழ் இளைஞர்கள் அச்சப்படுவதாகவும், இனியும் அங்கிருப்பது ஆபத்தென்பதால் குடும்பத்தினர் கூறிய ஆலோசனையின் பேரில் இந்தியா வந்ததாகவும் கூறியிருக்கின்றனர்.

அவர்களிடம் சந்தேகப்படும் படியான எப்பொருளும் இல்லை. அவர்கள் கூறுவதும் உண்மை போலத் தெரிகின்றதென்றாலும், முறையான ஆவணங்களின்றி இந்தியா வந்திருப்பதால் அவர்கள் மீது வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, கைது செய்து மாஜிஸ்ரேட் முன் ஆஜர்படுத்தியதாக உயர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களின் பின்புலம் குறித்து சரிவர அறிந்த பின், அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா? அல்லது அகதி முகாம்களுக்கு அனுப்பப்படுவார்களா? என்பதை மாநில அரசுதான் முடிபு செய்யும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. (எ–11)

# உயிர் நீத்த...

வர் அழைப்பு விடுத்தது எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

உயிர் நீத்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமாறு அறிவிக்கப்பட்டபோது விருந்தினர்களாக கலந்து கொண்டவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் சங்கடப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (எ–6)

# தேசிய சுதந்திர முன்...

டுள்ள நிரந்த சமாதானச் சூழலை குழப்பி ஒற்றுமையை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர்.

அவர்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் பிரிவினைவாதத்தை கைவிட்டு விடுங்கள் என்று அத்தோடு ஒற்றுமை மூலமே இந்த நாட்டை மீள கட்டியெழுப்ப முடியும் என்பதையும் சமாதானத்தைப் பாதுகாக்க முடியும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

யுத்த காலத்தில் இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி பாதுகாப்பு தரப்பினரை மக்களின் காணிகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் வெளியேற்ற ஒற்றுமை நிலைத்திருக்க வேண்டும் சமாதானம் நிலைபெற வேண்டும்

நாங்கள் ஒன்றும் தமிழ் மக்களுக்கும் தமிழினத்திற்கும் எதிரானவர்களல்ல; அத்தோடு இனவாதிகளுமல்ல; பிரிவினை வாதத்தினைத் தூண்டுபவர்களுமல்ல.

ஆனால் பயங்கரவாதத்திற்கும் நாட்டில் பிரிவினை வாதத்தினை தூண்டுபவர்களுக்கும் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படுத்துபவர்களுக்கும் எதிரானவர்கள்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் குற்றப் பிரேரணை கொண்டு வந்து அழுத்தங்களை பிரயோகித்ததோடு மட்டுமல்லாது தனி நாடு பற்றிய தூண்டுதல்களை ஏற்படுத்தி மீண்டும் போராட்டத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

அவர்களின் நோக்கம் இனங்களுக்கிடையில் பிரிவினை வாதத்தினை உருவாக்கி சமாதானத் தூதுவர்களாக வந்து எமது நாட்டு வளத்தையும் மக்களின் சொத்துக்களையும் சுரண்டிச் செல்வதே.

நாங்கள் பாரிய நெருக்கடிக்கு மத்தியில் சமாதானச் சூழலை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

தேசியம், சுயநிர்ணயம் பற்றி பேசிக் கொண்டு இனங்களுக்கிடையில் முரண்பாட்டை விதைக்கின்றனர். ஒற்றுமையை பாதிக்கும் வகையில் செயற்படுகின்றனர் என பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். (எ–6)

# அறிக்கை...

உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த ஏழு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் போராட்டம் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இந்தியாவிற்கான இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்திற்கு, இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்திய மத்திய அரசாங்கத்துடன் மட்டுமே தொடர்புகளைப் பேணும் எனவும், தமிழகத்தில் நடைபெற்று வரும் ஒவ்வொரு போராட்டத்திற்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ–11)

# ஜனாதிபதிக்...

கள், அமெரிக்க சட்ட வல்லுநர் புருஸ் பெய்ன் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

லண்டனைச் சேர்ந்த காசிப்பிள்ளை மனோகரன் உள்ளிட்ட மூன்று பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடர முடியாது என அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ–11)

# கல்லூரி...

தமிழர் பிரச்சினையில் அலட்சிய போக்குடன் செயல்படும் மத்திய அரசைக் கண்டித்து திருவாரூரில் மாணவர்கள், அஞ்சல் அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி செய்தனர். இதனால் பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டது.

கோவையில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், இலங்கைத் தூதர் காரியவாசத்தை கைது செய்ய வலியுறுத்தினர்.

இனப்படு கொலை நிகழ்த்திய ராஜபக்ஷ அரசுடன் தூதரக உறவை முறித்துக் கொள்ளவும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கல்லூரிகள் இன்று முதல் செயல்பட்டாலும், தமிழர் படுகொலை குறித்த கண்காட்சி, கருத்தரங்குகளை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இருப்பதாக மாணவர்கள் அறிவித்தனர். (எ–11)

# நடிகர்...

தனும் ஈழத் தமிழர்களுக்காக நடந்த கொடுமைகளை எண்ணி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர். அந்த உணர்வுகளை பயிர் செய்யும் விதத்தில் கலைஞர்கள் ஒன்று திரண்டு உங்கள் (சரத்குமார்) தலைமையில் உண்ணாவிரதம் நடத்துவதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் போராட்டத்தில் நானும் கலந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு இருந்தாலும், அவுஸ்திரேலியாவில் படப்பிடிப்பில் இருப்பதால் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ள இயலாது குறித்து வருத்தமடைகின்றேன்.

ஈழத் தமிழர்களுக்கு விடியல் பிறக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்று அக்கடிதத்தில் விஜய் தெரிவித்துள்ளார். (எ–11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

French மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இச் சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்க விரும்பும் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள். (2290)

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna. E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)


# வெப்பநிலை...

சூரியன் நேரே உச்சம் கொடுப்பதால் மேலும் வெப்பம் அதிகரிக்குமென வளிமண்டல வியல் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஒவ்வொரு வருட மும் ஏப்ரல் மாதத்தில் இது வழமையான தோற்றப்பா டெனவும் அவர் கூறினார்.

இரத்தினபுரியில் கடந்த திங்கட்கிழமை அதிகூடிய வெப்பநிலை 35.8 பாகை பதிவாகியுள்ளது. இதேவேளை, அநுராதபுரத்தில் 32.9 பாகை வெப்ப நிலையும் கொழும்பில் 32 பாகை வெப்பநிலையும் பதிவாகியுள்ளது.

நுவரெலியாவில் வெப்பநிலை 23 பாகைக்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். இதேவேளை பதுளை மற்றும் பண்டாரவளையில் கூடிய வெப்ப நிலையாக முறையே 26, 29 பாகை காணப்பட்டது.

மத்தளவில் வெப்பநிலை 32.2 பாகையாக காணப்பட்டது. இதேவேளை, நேற்று முன்தினம் 60 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டது. (எ-11)


## அரிய வாய்ப்பு

**அமெரிக்காவில் படிக்க, உழைக்க**

மிக, மிக குறைந்த செலவில் சட்ட ஆலோசனை

விரைந்து வாருங்கள்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



**021 221 9016, 021 568 9090**

ஏழு நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். (சி-2861)



## சேவை நலன் பாராட்டு



மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் கடந்த **21 வருடங்கள்** சேவையாற்றி *03.04.2013* இன்று மு/விசுவநாதர் ஆரம்ப பாடசாலையில் இருந்து ஓய்வுபெறும் **திருமதி செல்வராணி சதானந்தன்** அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நிறைவான வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்

**பாடசாலை சமூகம்,**

மு/விசுவநாதர் ஆரம்ப பாடசாலை

மு/விசுவமடு மகாவித்தியாலயம்

(2291)



## கணினி திருத்தம்
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

*அழையுங்கள்:*

**077 9086737**

GUNAA BEST PC
52,Hospital Road,
Jaffna.

(2303)



## வீடு விற்பனைக்கு

சாஸ்திரியார் ஒழுங்கை, கனகரட்ணம் வீதி ,அரியாலையில் (மாம்பழம் சந்தி அருகாமையில்) சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்புகளுக்கு:-*

**077 2720103**

(2281)



## தரம் 5 புலமைப்பரிசில்

மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது

# வெற்றிச்சிகரம்

மாதிரி வினாத்தாள்கள்,விடையுடன்

ஆக்கம்: திருகோணமலை S.கணேசலிங்கம்

யாழ்நகரில் அன்னை புத்தகசாலை - 021 2229881

**வெளியீடு : யுனிலங்காஸ் - 077 6258778**

**முன்னனி ஆசிரியர்களின் யுனிலங்காஸ் வெளியீடுகள்**

| | |
|---|---|
| 1. சுற்றாடல் சங்கமம் | S.சுதர்சன் (வவுனியா) |
| 2. அடிப்படைத் தமிழ் வழிகாட்டி | M.சுகந்தன் (காரைநகர்) |
| 3. கட்டுரைச் சங்கமம் | M.சுகந்தன் (காரைநகர்) |
| 4. கணித விவேக வழிகாட்டி | M.ஷபான் (அக்கரைப்பற்று) |
| 5. புலமைச்சங்கமம் | S.சுதர்சன் |

மாணவர்களின் வெற்றிக்காக யுனிலங்காஸ் வெளியீடுகள்



union assurance

*Trust in your tomorrow, today.*

## வெளிநாட்டு சுற்றுலா



**ரி.குபேந்திரன்**

பிராந்திய முகாமையாளர், பருத்தித்துறை



**எம்.ரவிசங்கர்**

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்

பருத்தித்துறை



**வி.துவாரகன்**

காப்புறுதி ஆலோசகர், பருத்தித்துறை கிளை.

யூனியன் அஸ்சூரன்ஸ் அகில இலங்கையில் நடத்திய போட்டியில் வெற்றியீட்டி டுபாய் & அபுதாபிக்கு இன்று பயணமாகும் பருத்தித்துறை பிராந்திய உத்தியோகத்தர்களை

வாழ்த்துவோர்:

**வட வலய முகாமையாளர். பருத்தித்துறை பிராந்திய உத்தியோத்தர்கள்.**



தற்போது யாழ் நகரில்...



BTEC HND in

# BIOMEDICAL SCIENCE

Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED

14 Years of Trust & Excellence in Higher Education

08.04.2013 இல் பாடநெறிகள் ஆரம்பம்

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

*Building Careers - Transforming Lives*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.